Registered as a Newspaper




# உதயன்

'அன்புசால் வாசகர்கள்,
விநியோகஸ்தர்கள், விளம்பரதாரர்கள்
அனைவருக்கும் உதயனின்
ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துகள்'

சுடர் : 41
கதிர் : 36

வியாழக்கிழமை
01 ஜனவரி 2026

மார்கழி 17 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 20
விலை – ரூபா 50

## பொலிஸ் அராஜகத்துக்கு எதிராக கறுப்புப் பட்டியுடன் உறுப்பினர்கள்

யாழ்ப்பாணம், ஜன. 1
தையிட்டி விகாரைக்கு எதிராக அமைதி வழியில் போராட்டம் நடத்தியவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்து, வலி. வடக்கு பிரதேசசபையின் நேற்றைய அமர்வில் உறுப்பினர்கள் கறுப்புப் பட்டிகளை அணிந்தவாறு கலந்து »19

## ஜோன்ஸ்டன் தலைமறைவு

விரிவு பக்கம்:-05

திஸ்ஸ விகாரைக்காக

# ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் கட்டம் கட்டமாக விடுவிப்பு!

மாவட்டச் செயலர் - காணி உரிமையாளர்கள் சந்திப்பில் இணக்கப்பாடு



**யாழ்ப்பாணம், ஜனவரி 1**

**திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளைக் கட்டம் கட்டமாக விடுவிப்பதற்கு, யாழ்ப்பாணம் மாவட்டச் செயலருக்கும், காணிகளின் உரிமையாளர்களுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் இணக்கம் காணப்பட்டுள்ளது.** »19

## கொழும்பு மாநகரசபை; நிறைவேறியது பட்ஜெட்

சொல்லியடித்தது திசைகாட்டி

கொழும்பு, ஜன. 1
கொழும்பு மாநகரசபையின் பட்ஜெட் பல்வேறு எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நேற்று வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.
கொழும்பு மாநகர நிர்வாகத்தின் முதலாவது பட்ஜெட் கடந்த 22ஆம் திகதி முன்வைக்கப்பட்டது. »19

## காலி மாநகரசபையில் களேபரம் உறுப்பினர்கள் ஐந்து பேர் கைது!



கொழும்பு, ஜன. 1
காலி மாநகரசபை அமர்வின் போது கூச்சல் குழப்பத்தில் ஈடுபட்டதுடன், மாநகரசபைச் செயலாளர் உட்பட அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். »19

தொண்டைமானாறு

## அக்கரைப் பகுதியில் முதலை நடமாட்டம்

பொதுமக்களுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 1
வடமராட்சி - தொண்டைமானாறு - அக்கரைப் பகுதியில் முதலைகளின் நடமாட்டம் உள்ளது. எனவே இது தொடர்பில் அவதானமாகச் செயற்பட வேண்டும் என்றும் மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. »19

## வீட்டுத்திட்டத்தின் நிதியை இரட்டிப்பாக்கியது இந்தியா

விரிவு பக்கம்:-02

## மயங்கி வீழ்ந்து முதியவர் சாவு!

யாழ்ப்பாணம், ஜன. 1
வீதியால் பயணித்துக் கொண்டிருந்த முதியவர் ஒருவர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.
யாழ்ப்பாணம் - ஓட்டுமடத்தைச் சேர்ந்த கனகரட்ணம் துரைராஜசிங்கம் (வயது-67) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந் »19

வெள்ளத்தால் பழுதடைந்ததாகப் பொய்கூறி

## பழைய 'ஐபாட்டை' காண்பித்து 50,000 ரூபா இழப்பீடு பெற்றேன்

வெளிப்படையாக ஏற்றார் அர்ச்சுனா எம்.பி.

யாழ்ப்பாணம், ஜன. 1
பழைய அப்பிள் ஐபாட் ஒன்றைக் காண்பித்து, அது மழைத்தண்ணீரால் பழுதடைந்துவிட்டதாகப் பொய் கூறி அரசாங்கத்திடமிருந்து 50 ஆயிரம் ரூபா நிவாரணத் தொகையைப் பெற்றுள்ளேன். எனவே, »19


## பொலிஸ் துறைக்குள் அரசியற் தலையீடுகள்

நாமல் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன. 1
பொலிஸ் துறையை முழுமையாக அரசியல் மயப்படுத்தும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச குற்றஞ் சாட்டியுள்ளார். »19

## மணல் கடத்திய டிப்பர் மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு



கிளிநொச்சி, ஜன. 1
கிளிநொச்சியில் மணல் ஏற்றிச்சென்ற டிப்பர் மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்திய நிலையில், அந்த டிப்பர் வீதியில் மணலைக் கொட்டிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-
மணல் கடத்திச் சென்ற டிப்பரொன்றை பொலிஸார் இடைமறித்துள்ளனர். இதன்போது, பொலி »19




## ஊழலற்ற ஆட்சி என்பதால் பதறுகின்றது எதிரணி!

கொழும்பு, ஜன. 1
ஊழல், மோசடியற்ற வழியில் அரசாங்கம் பயணிப்பதால்தான் எதிர்க்கட்சிகள் தமது அரசியல் இருப்பை எண்ணி அச்சப்படுகின்றன என்று அமைச்சர் லால்காந்த தெரிவித்துள்ளார். இலங்கையின் அண்மைக்கால அரசியற் போக்குத் தொடர்பிலும், »19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | | ஹந்தஹண ராசி சுப பலன் | | NLB ஜய | | மெகா பவர் | | மஹஜன சம்பத | | தன நிதானய | | அத சம்பத | | சுப தவசக் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| திகதி | 31.12.2025 | திகதி | 31.12.2025 | திகதி | 31.12.2025 | திகதி | 31.12.2025 | திகதி | 31.12.2025 | திகதி | 31.12.2025 | திகதி | 31.12.2025 | திகதி | 31.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4302 | சீட்டிழுப்பு இலக்கம் | 1369 | சீட்டிழுப்பு இலக்கம் | 0328 | சீட்டிழுப்பு இலக்கம் | 2408 | சீட்டிழுப்பு இலக்கம் | 6060 | சீட்டிழுப்பு இலக்கம் | 2090 | சீட்டிழுப்பு இலக்கம் | 0635 | சீட்டிழுப்பு இலக்கம் | 0176 |
| ஆங்கில எழுத்து | X | வெற்றி இலக்கினம் | மிதுனம் | ஆங்கில எழுத்து | V | ஆங்கில எழுத்து | J | ஆங்கில எழுத்து | Y | ஆங்கில எழுத்து | Y | ஆங்கில எழுத்து | Y | வெற்றி இலக்கினம் | கடகம் |
| | | | | | | சுப்பர் இலக்கம் | 09 | | | விசேட எழுத்து | Y | | | | |
| வெற்றி இலக்கங்கள் | 25 26 55 71 | வெற்றி இலக்கங்கள் | 13 24 37 41 | வெற்றி இலக்கங்கள் | 1 5 1 9 | வெற்றி இலக்கங்கள் | 06 13 15 31 | வெற்றி இலக்கங்கள் | 3 2 8 7 9 6 | வெற்றி இலக்கங்கள் | 22 24 38 42 | வெற்றி இலக்கங்கள் | 8 7 9 6 | வெற்றி இலக்கங்கள் | 15 33 55 |
| விசேட எழுத்து | | | | | | | | | | | | | | | |

# நாட்டில் அதிகரித்துவரும் 'ஐஸ்' போதைப்பாவனை

## 60,000 பேர் இதுவரை கைது

**கொழும்பு, ஜன.1**

**நாட்டில் மெத்தம்பெட்டமைன் எனப்படும் 'ஐஸ்' போதைப்பொருள் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்று தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் அதன் ஆராய்ச்சிப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் தெரிவிக்கையில்,

கடந்த ஆண்டின் முதல் 10 மாதங்களில் மட்டும் ஐஸ் போதைக்கு அடிமையான 60ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் கண்டி மாவட்டங்களில் இந்த போதைப்பொருள் பயன்பாடு அதிகமாகக் காணப்படுகின்றது. கடந்த சில ஆண்டுகளில் கைது செய்யப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில், மெத்தம்பெட்டமைன் (ஐஸ்) எனப்படும் போதைப்பொருளின் பயன்பாடு படிப்படியாக அதிகரித்து வருவதை அடையாளம் காணமுடிகின்றது. ஹெரோய்ன் மற்றும் கஞ்சாவுடன் ஒப்பிடுகையில், ஐஸ் போதைப்பொருளின் பயன்பாடு தற்போது அதிகவேகத்தில் உயர்ந்துவருகின்றது. 20 முதல் 30 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் போதைப்பொருள் பயன்பாட்டில் அதிக நாட்டம் கொண்டுள்ளனர் - என்றார். (ச-இ)

## மாட்டிறைச்சியுடன் சந்தேகநபர் கைது!




யாழ்ப்பாணம், ஜன.1

மாட்டை சட்டவிரோதமான முறையில் இறைச்சியாக்கி மீன் கொண்டு செல்லும் பெட்டியில் மறைத்து மோட்டார் சைக்கிளில் சூட்சுமமான முறையில் கொண்டு சென்ற நபர் வேலணை, அராலிச் சந்திப் பகுதியில் நேற்றுப் புதன்கிழமை ஊர்காவற்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறைப் போக்குவரத்துப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் குமார தலைமையிலான பொலிஸ் அணியினர் சந்தேகத்தின் பேரில் அவரை வழிமறித்துச் சோதனையிட்ட போதே இந்தக் குற்றச்செயல் கண்டறியப்பட்டது.

சந்தேகநபரிடமிருந்து ஒரு கிலோ நிறையுடைய 35 இறைச்சிப் பொதிகளும், மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

சந்தேகநபரை ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-66,27)



## ஐ.தே.க. பிரதிநிதிகளுடன் சஜித் பிரேமதாஸ சந்திப்பு

கொழும்பு, ஜன.1

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்குமிடையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை கொழும்பிலுள்ள நட்சத்திர விடுதியொன்றில் சந்திப்பொன்று நடந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அகிலவிராஜ் காரியவசம், ருவான் விஜேவர்த்தன மற்றும் நவீன் திஸாநாயக்க ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தபோதும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் சஜித் பிரேமதாஸ மட்டுமே பங்கேற்றிருந்தார்.

சந்திப்புத் தொடர்பாக தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர், 'எமது தாய்நாடு எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் தேசிய இலக்குகளைப் பயனுள்ள மற்றும் திறமையான முறையில் நிறைவேற்ற புதுமையான கொள்கை நடவடிக்கைகளை வகுப்பதன் முக்கியத்துவம் குறித்து பயனுள்ள மற்றும் நேர்மறையான கலந்துரையாடல்கள் நடைபெற்றன' எனக் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## வீட்டுத்திட்டத்தின் நிதியை இரட்டிப்பாக்கியது இந்தியா

கொழும்பு, ஜன.1

இலங்கையில் 'கிராம சக்தி' வீட்டுவசதித் திட்டங்களுக்கான நிதி வழங்கலை இந்தியா இரட்டிப்பாக்கியுள்ளது,

ஒரு வீட்டுக்கான இந்தியாவின் பங்களிப்பை இலங்கை மதிப்பில் 5 இலட்சம் ரூபாவில் இருந்து 10 லட்சம் ரூபாவாக உயர்த்தியுள்ளது.

இது தொடர்பான உத்தியோகபூர்வ கடிதங்களை இந்தியத்தூதுவர் சந்தோஷ் ஜா மற்றும் வீட்டு வசதி அமைச்சு செயலாளர் எல்.பி. குமுதுலால் ஆகியோர் பரிமாறிக்கொண்டனர். வடக்கு மற்றும் தெற்கு மாகாணங்களில் உள்ள ஆயிரத்து 550க்கும் மேற்பட்ட குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் அதிகரிக்கப்பட்டுள்ள உதவியால் பயனடைவார்கள் என இந்திய வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)

| சுபிரி தன சம்பத | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | வெற்றி வாரம் |
| 31.12.2025 | புதன்கிழமை | | 0768 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | | |
| Z | 3 3 4 0 4 0 | | |

| Super Ball | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 31.12.2025 | புதன்கிழமை | | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| 3034 | M | 12 17 43 44 | |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 31.12.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| N | 18 39 54 80 | 5195 |

| SASIRI | |
|---|---|
| திகதி | தினம் |
| 31.12.2025 | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0864 | 11 47 49 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 31.12.2025 | புதன்கிழமை | |
| துலாம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 19 37 38 47 | 4746 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 31.12.2025 | புதன்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| B | 39 | 09 15 51 67 | 2210 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 31.12.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| M | 25 29 70 72 | 2860 |

## அரசமைப்பு பேரவையின் சுயாதீனத்துக்கு ஆபத்து!

### தயாசிறி எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஜன.1

அரசமைப்புப்பேரவையின் சுயாதீனத்தன்மைக்கு தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நடவடிக்கைக்கு இடமளிக்கமுடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

அரசமைப்புப் பேரவையென்பது ஜனாதிபதியின்கீழ் இயங்கும் நிறுவனம் அல்ல. அது சுயாதீன சபையாகும். ஜனாதிபதியால் அனுப்பப்படும் பெயருக்கு அந்தச் சபை அங்கீகாரம் வழங்க வேண்டும் என்ற தொனியில் கருத்து வெளியிடும் ஆளுங்கட்சியினர் அதைப் புரிந்துகொள்ளவேண்டும். ஊழல், மோசடிகளுக்கு எதிராக அதிகளவில் குரல் கொடுத்த கட்சிதான் ஜே.வி.பி. அந்தக் கட்சியின் ஆட்சியின்கீழ் கணக்காய்வாளர் நாயகம் இல்லாத நாடாக இலங்கை இன்று மாறியுள்ளது. கணக்காய்வாளர் நாயகம் இன்றி நாடாளுமன்றத்தில் கோப் மற்றும் கோபா குழுக் கூட்டங்களை நடத்த முடியாது. எனவே, எதிர்வரும் 6 ஆம் திகதிக்குள் கணக்காய்வாளர் நாயகம் நியமிக்கப்படவேண்டும் – என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகைமையுணர்வுகளைக் களைந்து புது உலகைப்படைக்க ஒன்றுபடுவோம்

புத்தாண்டு வாழ்த்துச்செய்தியில்
யாழ்.மறைமாவட்ட ஆயர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.1

பிறந்திருக்கும் புதிய வருடத்தில் தொடர்பாடலைச் சீர்படுத்தி முரண்பாடுகளையும் பகைமையுணர்வுகளையும் களைந்து புது உலகைப்படைக்க முன்வருவோம் என்று யாழ்.மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்த புத்தாண்டு வாழ்த்துச்செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:
பாலக இயேசுவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துகளை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.
2025ஆம் ஆண்டு, இறையருளோடுகூடிய, பல வாழ்வியல் அனுபவங்களையும், இயற்கை அனர்த்தம் உருவாக்கிய வலிகளையும், வேதனைகளையும் எமக்கு தந்து சென்றிருக்கும் ஆண்டாக அமைந்திருப்பதுடன் நம்பிக்கையின் திருப்பயணிகளாக யூபிலி அருளை நாம் பெற்றுக்கொண்டு வாழ்வில் முன்னேற இறையருளையும் வாரித்தந்த ஆண்டாகவும் அமைந்துள்ளது. 2025ஆம் ஆண்டுக்கு நன்றி கூறி விடையனுப்பி, 2026 ஆம் ஆண்டு, புதிய வருடத்தை இறைநம்பிக்கையோடு ஆரம்பிக்கின்றோம். முரண்பாடுகளைத் தீர்த்து நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பணியில் தொடர்பாடலின் பங்கு மிகவும் முக்கியமானது. எனவே பிறந்திருக்கும் புதிய வருடத்தில் தொடர்பாடலை சீர்படுத்தி முரண்பாடுகளையும் பகைமையுணர்வுகளையும் களைந்து புது உலகைப் படைக்க முன்வருவோம்.
புதிய ஆண்டு சிறப்பான ஆண்டாகவும், அமைதியின் ஆண்டாகவும், நம்பிக்கையின் ஆண்டாகவும் உங்கள் அனைவருக்கும் அமைய வாழ்த்தி நிற்கின்றேன் - என்றார். (ச)

# தமிழரசின் அரசியல் குழு கூட்டம் சனிக்கிழமை

கொழும்பு, ஜன.1

இலங்கை தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக்கூட்டம் நாளைமறுதினம் சனிக்கிழமை வவுனியாவில் நடைபெறவுள்ளது.
2026 ஆம் ஆண்டின் முதலாவது கூட்டமாக அமையவுள்ள இந்தக் கூட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் விசேடமாகக் கலந்துரையாடப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. 2026ஆம் ஆண்டில் மாகாண சபைத்தேர்தலை நடத்துவதற்கான அழுத்தங்களைப் பிரயோகித்தல் மற்றும் அந்த விடயம் சார்ந்து முன்னெடுக்கப்பட வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் இந்தக் கூட்டத்தின் போது ஆராயப்படவுள்ளது. (ஏ-இ)

# கொழும்பு மாநகரசபை ஊழலை விசாரிப்பதற்கு ஆணைக்குழு

கொழும்பு, ஜன.1

கொழும்பு மாநகரசபையில் நடந்தன என்று கூறப்படும் ஊழல்கள் மற்றும் முறைகேடுகள் தொடர்பாக விசாரித்து, ஆய்வு செய்து, அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.
முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க, பட்டயக் கணக்காளர் ஈ.ஆர்.எம்.எஸ்.எச். ஏக்கநாயக்க மற்றும் முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டி.எஸ். விக்ரமசிங்க ஆகியோரை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமித்துள்ளார். இதுதொடர்பான விசேட வர்த்தமானி ஜனாதிபதியின் செயலாளரின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.
2010 முதல் 2025 வரையிலான காலகட்டத்தில் கொழும்பு மாநகரசபைக்குள் நடந்ததாகக் கூறப்படும் ஊழல், மோசடி, குற்றவியல் நம்பிக்கை மோசடி மற்றும் சொத்துகளை குற்றவியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்தல் ஆகிய குற்றங்களை விசாரிக்க இந்த ஆணைக்குழுவுக்குப் பணிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)



# துப்பாக்கி உரிமங்களை புதுப்பிக்க காலஅவகாசம்

கொழும்பு, ஜன.1

பாதுகாப்பு நிமித்தம் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் வசமுள்ள துப்பாக்கிகளுக்கான 2026ஆம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரங்களை புதுப்பிப்பதற்கான கால எல்லையை நீடிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.
நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை மற்றும் அனர்த்த நிலைமைகளைக் கருத்திற்கொண்டு, கால அவகாசத்தை நீடிக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கால அவகாசம் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை ஒரு மாத காலத்தால் நீடிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)

இலங்கை

# இயற்கைப் பேரிடரில் மீள 2,616 தொன் உதவிகள்

கொழும்பு, ஜன.1

டித்வா புயலால் ஏற்பட்ட பாதிப்புகளில் இருந்து மீள்வதற்காக 22 நாடுகள் மற்றும் உலக உணவுத்திட்டம் போன்ற சர்வதேச நிறுவனங்களிடம் இருந்து 2 ஆயிரத்து 616 தொன் உணவு உட்பட மனிதாபிமான உதவிகள் கிடைத்துள்ளன என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
கிடைத்த உதவிகளில் இதுவரை ஆயிரத்து 800 தொன் பொருள்கள் மக்களுக்குப் பகிரப்பட்டுள்ளன. இவை தவிர 26 தொன்னுக்கும் அதிக மருந்துப்பொருள்களும் கிடைத்துள்ளன. அவை சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளன. வெளிநாடுகளிலிருந்து பெருந்தொகை உதவிகள் கிடைத்துள்ளதால் விசேட கணக்காய்வு நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன- என்றார். (ஏ-இ)




## இப்பிடியும் குடுக்கலாம் நிவாரணம்

முதல்ல எல்லாருக்கும் பட்சியின்ர புது வருச வாழ்த்து. வருசம் பிறந்தகையோட இஞ்ச நடக்கிற குற்றம் குறையளை நோண்டுறது நல்லதில்லை. அதால நல்லவிசயமொண்டைச் சொல்லிக்கொண்டு வருசத்தைத் தொடங்குவம்.

போன நவம்பர் மாதம் உந்த டித்வா புயலடிச்சு,மழை வெள்ளம் வந்து நாட்டை சீரழிச்சுப் போட்டுது. கன பேரின்ர வாழ்க்கையை உந்தப் புயல் அழிச்சுப்போட்டுது. அப்பிடியொரு பேரழிவு எங்கட இடத்துக்கு வரேலை, ஆனாலும் நெல்லுக்கிறைச்ச தண்ணி புல்லுக்கும் பொசியுமாம். அதைமாதிரி , மழைவெள்ளத்தால வீடிடியுண்டு, குடும்பத்தோட மண்ணுக்க புதையுண்டு, வீட்டுக்காணியே மண்சரிவால காணாமல் போன ஆக்களுக்குக் கிடைச்ச அதே நிவாரணத்தொகை, முழங்கால் அளவு தண்ணி வந்த எங்கட இடத்துக்கும் கிடைச்சது. வழக்கமா நிவாரணம் குடுக்கப் பஞ்சிப்படுற எங்கட அதிகாரிமார், இந்த வெள்ள நிவாரணம் குடுக்கிறதில மட்டும் பாரி வள்ளல் மாதிரி தாராளம் காட்டினவை. அப்பிடியிருந்தும் கனபேர் தங்களுக்கு நிவாரணம் கிடைக்கேலை எண்டும் புலம்புகினம் தான். "எங்கட வீட்டை விட பக்கத்துவீட்டுக்கு வெள்ளம் குறைவு, ஆனால் அவைக்கு நிவாரணக்காசு குடுபட்டிருக்கு. ஆனால் எங்களுக்கு தரேலையே எண்ட புகைச்சலும் கன இடங்களில இருக்கு. இப்பிடி முழங்காலளவு வெள்ளத்துக்கே நிவாரணம் கிடைக்கேலை எண்டு சண்டை பிடிக்கிற ஆக்களுக்கு நடுவில, தனக்குக் கிடைச்ச நிவாரணக் காசை அப்பிடியே மலையகத்தில பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்துக்கு குடுத்து "இப்பிடியும் நிவாரணக்காசை பாவிக்கலாம்" எண்டு முன்னுதாரணமா நடந்திருக்கிறார் மாநகரசபையின்ர முன்னாள் உறுப்பினர் பார்த்திபன்.

பார்த்திபனைப் பற்றிச் சொல்லித் தெரியவேண்டியதில்லை. முந்தி மாநகரசபை உறுப்பினரா இருக்கேக்க, யாழ்ப்பாணம் ரவுனுக்கை இனிமேல் வெள்ளப் பிரச்சினை வரக்கூடாது எண்டு, வருசக்கணக்கா துப்புரவு செய்யாமல் கிடந்த வாய்க்கால் எல்லாத்தையும் தானும் இறங்கி நிண்டு கிளீன் பண்ணினவர். அப்பிடி ஊருக்கே வெள்ளம் வரக்கூடாது எண்டு பார்த்துப் பார்த்துச் செய்த பார்த்திபன்ர வீட்டுக்கையே இந்தமுறை வெள்ளம் போட்டுது. வீட்டுக்க இருந்த போட்டோக்கொப்பி மிசினுக்கையும் வெள்ளம் புகுந்து அதைப் பாவிக்கமுடியாத நிலை. கூரையிலையும் சேதம். எண்டாலும் தன்ர வீட்டுக்க வெள்ளம் புகுந்திட்டுது எண்டு அந்தாள் ஓடிப்போய் நிவாரணத்துக்குப் பதியேலை. எண்டாலும் அவரின்ர வீட்டுக்கை வெள்ளம் நிக்குதெண்டு மீடியாக்களில செய்தி பரவ, விதானையார் வந்து பார்த்திருக்கிறார். அப்பதான் பார்த்திபன் வீட்டுக்கும், அந்த றோட்டில இருந்த இன்னும் மூண்டு வீடுகளுக்கும் வெள்ளம் கடுமையாப் புகுந்திருக்கு எண்டு விளங்கி எல்லாருக்கும் நிவாரணம் குடுத்திருக்கிறார்.

ஆனாலும் பார்த்திபனுக்கு அந்த நிவாரணக் காசை வாங்கிறதில தயக்கம். "எங்களை விட மோசமா பாதிக்கப்பட்ட மலையக மக்களுக்கு இன்னும் உதவி தேவைப்படேக்க, நாங்கள் உதை வாங்கிறது சரியில்லை" எண்டு மலையகத்தில வெள்ளத்தால வந்த பாதிப்பைப் பார்க்கேக்க அவரின்ர மனம் சொல்லியிருக்குது. உடனேயே தன்ர நிவாரணக்காசில மலையகத்தில (ராகலைப் பகுதியில) பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்துக்கு சீற்றும், இன்னும் சில சாமான்களும் வாங்கிக் குடுத்திருக்கிறார். பார்த்திபனை மாதிரி மனச்சாட்சி உள்ளவை மலையகத்துக்கு தங்கட நிவாரணக்காசைக் குடுத்து யாழ்ப்பாணத்தாரின்ர பெருந்தன்மையைக் காட்டுவினமோ?

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய
(ராசிபலன்)



**மேடம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. நேற்றைப்போலவே இன்றைக்கும் புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**இடபம்:** உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். செலவுகள் அதிகரித்தாலும் கடன் வாங்காமல் சமாளித்துவிடுவீர்கள். அதிகரிக்கும் பணிச்சுமையின் காரணமாக உடல் அசதி உண்டாகும். தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பதன்மூலம் மனஅமைதி பெறலாம்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவிகேட்டு வருவார்கள். தாய்மாமன்வழியில் செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாளாக அமையும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாகமுடியும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். முக்கியமான பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் ஆதாயமும் கிடைக்கும்.

**சிம்மம்:** கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். வாழ்க்கைத் துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப் பிடிக்கவும்.

**துலாம்:** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். திடீர்ச்செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளுக்காக பாடுபடவேண்டி இருக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாகமுடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் எதிர்பாராத பணவரவுடன், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக் கூடும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படும் நாள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிற்பகலுக்கு மேல் பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அவர்கள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள்.

**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். இளைய சகோதரவகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். வாழ்க்கைத்துணைவழி உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மீனம்:** புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். ஆனால், புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது நல்லது.




## தென்மராட்சியில் தமிழ்த்தின விழா

யாழ்ப்பாணம்,ஜன.1
தென்மராட்சிக் கல்வி வலயத்தின் தமிழ்த்தினவிழா சாவகச்சேரி சிவன் கோவிலடியில் அமைந்துள்ள கலாசார மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.
நிகழ்வில் வலய, மாகாண, தேசியமட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. விருந்தினர்கள், ஓய்வுபெற்ற தமிழ் ஆசிரியர்கள் பொன்னாடை போர்த்தி, நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.
தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல் துறைப் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா, சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் குமாரவேலு ஜோதிரட்ணராஜா, மற்றும் தென்மராட்சிக் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (க-159)

## கருத்தாடல்

வவுனியா,ஜன.1
வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின், 239ஆவது மாதாந்த முழுநிலாக் கருத்தாடல் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு, வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் இடம்பெறும்.
வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத் தலைவர் கலாநிதி க.அகளங்கன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், 4 நூல்களின் அறிமுக நிகழ்வும், கருத்தாடலும் இடம்பெறும். (க-159)




## பிரதோஷ வழிபாடு

யாழ்ப்பாணம்,ஜன.1
வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகா தேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை பிரதோஷ விரத வழிபாடு பக்திபூர்வமாக இடம் பெறவுள்ளது.
மாலை 4 மணிக்கு அபிஷேக ஆராதனைகள் ஆரம்பமாகி, சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம் பெறும். அதனைத் தொடர்ந்து நகுலேஸ்வரப் பெருமான் உள்வீதி உலா வரும் திருக்காட்சி இடம்பெறும். (க-66)

## செல்லப்பா சுவாமியின் குருபூசை நல்லூரில்!

யாழ்ப்பாணம், ஜன.1
சைவப்பிரகாசப் பேரவையின் ஏற்பாட்டில், நல்லூர் தேரடிச்சித்தர் செல்லப்பா சுவாமியின் மாதாந்தக் குருபூசை நிகழ்வு, நல்லூரிலுள்ள செல்லப்பா சுவாமிகளின் நினைவாலயத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.
அன்றையதினம் காலை 7 மணிக்கு அபிஷேக வழிபாடுகளைத் தொடர்ந்து திருமுறை, நற்சிந்தனைப் பாடல்கள் பண்ணுடன் ஓதப்பட்டன.
தொடர்ந்து கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் விரிவுரையாளர் குமரேசன் பாலசண்முகன் 'ராஜ வசியம்' எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார். நிகழ்வில் குருபூசை வழிபாடுகளும் நடைபெற்றன. (க-66)

தீவகப் பிரதேச செயலகங்கள் இணைந்து நடத்திய சிறுவர்கள் தொர்பான விசேட கலந்துரையாடல் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. பிரதேச செயலர் திருமதி வனஜா செல்வரட்ணம் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் வேலணை, காரைநகர்ப் பிரதேச செயலர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள் கலந்துகொண்டனர். (க-17)



## கஜேந்திரகுமார் எம்.பி.யின் நிதியில் குரங்குகளை விரட்ட துப்பாக்கிகள்!



விவசாயச் செய்கையில் பாதிப்பை ஏற்படுத்தும் குரங்குகளின் தொல்லையைக் கட்டுப்படுத்துவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட நிதியொதுக்கீட்டில் சாவகச்சேரிப் பிரதேசத்துக்கு இறப்பர் துப்பாக்கிகள் கையளிக்கப்பட்டுள்ளன. சாவகச்சேரியில் குரங்குகளின் தொல்லையால் கமக்காரர்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டு வருகின்றனர். விவசாயிகளின் பயிர்கள் அழிவைக் கட்டுப்படுத்த வேண்டும் எனக் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைய இதற்கு பத்து இலட்சம் ரூபா கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஒதுக்கீடு செய்திருந்தார். அதற்கமைய குறித்த நிதியிலிருந்து 20 கமக்காரர்களுக்கு குரங்குகளை விரட்டுவதற்கான இறப்பர் துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன. (ச-26)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை



## பொய்யாமொழி

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு**

**பொருள் :** எழுத்துகள் எல்லாம் அகரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. அதுபோல உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

# புதியதும் பழையதும்...!

2026ஆம் ஆண்டு பிறந்திருக்கின்றது. சுதந்திர இலங்கையின் ஏழு தசாப்தகால புத்தாண்டுகளைப் போல, ஏராளமான சவால்கள், நெருக்குவாரங்கள், பொருளாதார நெருக்கடிகள், அரசியற்பிரச்சினைகளைச் சுமந்ததாகவே இந்தப் புத்தாண்டையும் நாங்கள் எதிர்நோக்கியுள்ளோம். அரசாங்கம், ஆட்சி, அதிகாரம், கொள்கை, கோட்பாடு என அனைத்தும் புதிதாக இருந்தாலும், தமிழர்களின் நீண்டகால அபிலாஷைகளை நிறைவேற்றுவதில் எவ்வித முன்னேற்றமும் ஏற்பட்டதாக இல்லை.

70ஆண்டுகால இனப்பிரச்சினையும், 30 ஆண்டுகால உள்நாட்டுப்போரும் இலங்கையில் ஏற்படுத்திய அழிவுகள் பாரதூரமானவை. 2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்தாலும், காணாமற்போனவர்களின் விவகாரம், காணி விடுவிப்பு, அரசியற்கைதிகளின் விடுதலை, சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பு என ஒருவிதப் பதற்றத்துக்குள்தான் தமிழர்களின் அன்றாடம் கழிந்து கொண்டிருக்கின்றது. கடந்த அரசாங்கங்களால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்துமே பொய்த்துப் போய்விட்ட நிலையில், புதிய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் மீதான நம்பிக்கையும் தற்போது கொஞ்சம் கொஞ்சமாக இல்லாமல் போய்க் கொண்டிருக்கின்றது.

அரசியற்கைதிகளை விடுவிப்பதற்கு சந்தர்ப்பங்கள் கிட்டியபோதிலும், ஒரு வருடத்துக்கும் மேலான ஆட்சிக்காலத்தை ஏமாற்றியே கடத்தியிருக்கின்றது அநுர அரசாங்கம். புதிய அரசியலமைப்புப் பணிகளும் மாகாணசபைத் தேர்தல்களுக்குப் பின்னர்தான் என்றாகியிருக்கின்றது. மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் எந்தத் திட்டவட்டமான அறிவிப்புகளும் இல்லை. தையிட்டி திஸ்ஸ விகாரை ஆக்கிரமிப்பின் அடையாளமாக இருந்தாலும், அது அகற்றப்படாது என்பதுதான் அரசாங்கத்தின் முடிவாக அமைந்திருக்கின்றது. எனினும், இந்த அரசாங்கத்தின்மீது இப்போதும்கூட ஏதோவொரு நம்பிக்கை தொலைவிலேனும் தெரிவதை மறுப்பதற்கில்லை.

சுதந்திர இலங்கையின் ஏழு தசாப்தகால ஆட்சியும் சாபக்கேட்டின் சாட்சியாகவே இருக்கின்றது என பல்வேறு சந்தர்ப்பங்களில் பொரிந்து தள்ளியிருந்த ஜனாதிபதி அநுர, அந்தச் சாபக்கேடான ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டிய கடப்பாடு உடையவராகவே உள்ளார். மக்களின் மனவோட்டமும் அதுவாகத்தான் இருக்கின்றது. எனவே, அநுர அரசாங்கத்தின் வாக்குறுதிகளுக்கு வலிமை அதிகமா? அல்லது அவையும் காலப்போக்கில் காணாமல் போய்விடுமா? என்ற ஐயப்பாடுகளை, இந்தப் புத்தாண்டில் தமிழர்களின் மனங்களில் இருந்து மொத்தமாகத் துடைத்தெறிய வேண்டிய பெரும் பொறுப்பு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு இருக்கவே செய்கின்றது. அதைவிட கடந்தவருட இறுதியில் டித்வா புயலும், பெருவெள்ளமும் உண்டாக்கிய சேதாரங்களில் இருந்து நாடு இன்னும் மீளவில்லை. ஆயினும் இலங்கையை மீண்டெழ வைப்பதற்காக சர்வதேசம் காட்டும் அக்கறையும், வழங்கும் உதவிகளும் நம்பிக்கையைத் துளிர்க்க வைக்கும் வேளையில், 2026 ஆம் ஆண்டு மலர்ந்திருக்கிறது.

இந்தப் புத்தாண்டிலாவது காணாமற்போனவர்களின் விவகாரம், காணி விடுவிப்பு, அரசியற்கைதிகளின் விடுதலை, சிங்கள - பௌத்த ஆக்கிரமிப்பு என தமிழர் பகுதிகளில் நீண்டகாலமாக வியாபித்திருக்கும் துன்பங்களுக்குக் காத்திரமான தீர்வு வழங்கும் வகையிலும், டித்வா பேரிடரால் ஏற்பட்ட பாதிப்புகளில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் வகையிலும் தேசிய மக்கள் சக்தியினர் தீர்க்கமாகவும், தெளிந்த அறிவுடனும் செயற்பட வேண்டியது காலத்தின் தேவை.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111

செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com





## நிறைவேற்று அதிகாரத்தை நீக்கவேண்டும் அரசாங்கம்

*டிலான் பெரேரா வலியுறுத்து*

**கொழும்பு, ஜன.1**

**நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படவேண்டும் என்று முன்னாள் அமைச்சர் டிலான் பெரேரா வலியுறுத்தியுள்ளார்.**

இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது-

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் என்ற உறுதிமொழிகள் கடந்தகாலங்களில் வழங்கப்பட்டன. எனினும், அந்தஉறுதிமொழியை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சந்திரிகா அதற்குரிய முயற்சியை முன்னெடுத்தார். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி அதற்கு இடமளிக்கவில்லை. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் என தேசிய மக்கள் சக்தி உறுதியளித்துள்ளது. அதைநிறைவேற்றுவதற்கு எதிரணிகள் அழுத்தம் கொடுக்கவேண்டும். இதைவிடுத்து 2029 ஜனாதிபதி வேட்பாளர் பற்றி எதிரணிகள் கதைத்துக்கொண்டிருப்பது வேதனைக்குரிய விடயம். நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கிவிட்டு, நாடாளுமன்ற ஆட்சிமுறைமை ஏற்படுத்தப்பட வேண்டும்-என்றார். (எ-44)



## கொஹுவலையில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, ஜன.1

கொஹுவலை- போதியவத்த பகுதியிலுள்ள வீடு ஒன்றின் மீது நேற்றுமுன்தினம் இரவு நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 16 வயதுடைய சிறுமி ஒருவர் காயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் இந்த துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர்.

இந்தச்சம்பவம் தொடர்பில் கொஹுவலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (ச-இ)

## தே.ம.ச. வேட்பாளர் விபத்தில் உயிரிழப்பு

கொழும்பு, ஜன.1

மோட்டார் சைக்கிளும் தனியார் பேருந்து ஒன்றும் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தேசிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட வேட்பாளரான ஓய்வுபெற்ற பிரிகேடியர் உயிரிழந்துள்ளார்.

மாகும்புர பிரதேசத்தைச் சேர்ந்த எச். எம். சரத் விஜேசேன என்பவரே உயிரிழந்துள்ளார். இவருடன் பயணித்த ஓய்வுபெற்ற கேணல் படுகாயமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பண்டாரகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

## பிளாஸ்ரிக் பயன்பாடு அரைவாசியாகக் குறைவு

கொழும்பு, ஜன.1

பிளாஸ்ரிக் பைகளின் இலவச விநியோகத்தைத் தடைசெய்ததன் பின்னர், பிளாஸ்டிக் பை பயன்பாடு 50% குறைந்துள்ளதாக சுற்றுச்சூழல் பிரதி அமைச்சர் அன்டன் ஜெயகொடி தெரிவித்துள்ளார். 2025ஆம்ஆண்டு நவம்பர் முதலாம் திகதி முதல் கடைகளில் பிளாஸ்ரிக் பைகளுக்கு கட்டணம் வசூலிப்பது கட்டாயமாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)



## ஜோன்ஸ்டன் தலைமறைவு

லங்கா சதொச நிறுவனத்துக்குச் சொந்தமான லொறி உட்பட பல வாகனங்களை தவறாகப் பயன்படுத்தி அரசாங்கத்துக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை கைதுசெய்யப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தங்கியுள்ள இடம்தொடர்பில் இதுவரை எந்தவிதத் தகவல்களும் கிடைக்கவில்லை.

அதற்கமைய, விசாரணைகளை நடத்தி அவரைக் கைதுசெய்ய 5 பொலிஸ் குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை அரசாங்கச் சொத்துகளைத் தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் மகன் ஜோஹன் பெர்னாண்டோ குருநாகல் நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவினால் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

நாளை

வெள்ளிக்கிழமை - மார்கழி 18

02.01.2026

சுபநேரம் : 12.28 - 01.58

ராகுகாலம் : 07.58 - 09.28


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி மன்றங்களின் சுயாதீனத்தைத் தடுக்காதீர்கள்

## தேசிய மக்கள் சக்திக்கு சாவ. நகரசபை உபதவிசாளர் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஜன 1**

**உள்ளூராட்சிமன்றங்களின் பாதீட்டை எதிர்க்கும் குறுகியகால அரசியல் செயற்பாட்டைத் தேசிய மக்கள் சக்தியினர் கைவிடவேண்டும் என சாவகச்சேரி நகரசபையின் உபதவிசாளர் ஞா.கிஷோர் கோரிக்கை விடுத்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களின் பாதீடுகளைத் தேசிய மக்கள் சக்தி பல்வேறு காரணங்களைக் கூறி எதிர்த்து வாக்களித்து வருகின்றமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

எமது மன்றின் பாதீடு அனைத்து உறுப்பினர்களின் ஆலோசனையுடனும் குறிப்பாக தேசிய மக்கள் சக்தியின் அனைத்து உறுப்பினர்களின் ஆலோசனையுடனும் உள்ளடக்கித் தயாரிக்கப்பட்டது. எனினும் அவர்கள் எதிர்ப்பது வேடிக்கைக்குரியது. இது அந்தக் கட்சித் தலைமையின் அழுத்தம் என்பது தெட்டத்தெளிவாகத் தெரிகின்றது.


இதே நிலை தொடர்ந்தால் நிச்சயம் ஆட்சிமாற்றம் ஏற்படும். தாமே உத்தமர்கள் மற்றவர்கள் எல்லாம் திருடர்கள் என்ற மனநிலையில் இருந்து வெளியே வந்து மக்கள் நலனில் அக்கறையுடன் செயற்படவேண்டும்.

கட்சித் தலைமைகள் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களைக் கட்டுப்படுத்துவதை விடுத்து சுதந்திரமாகச் செயற்பட அனுமதிக்கவேண்டும்.

அப்போதுதான் உள்ளூராட்சி மன்றங்கள் வினைத்திறனாக மக்களுக்கு சேவை செய்யமுடியும்- என்றார். (ச-28)




வேலணை மற்றும் புங்குடுதீவு பிரதேசங்களில் வாழ்ந்து வருகின்ற மாவீரர் குடும்பங்கள் மற்றும் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட 40 குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள் மற்றும் உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. ஜனநாயக தமிழரசுக் கட்சியின் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே. வி. தவராசாவின் பாரியாரான அமரர் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா அம்மையாரின் நினைவாக குறித்த உதவிகள் வழங்கப்பட்டன. (ச-41)



டித்வா புயல் மற்றும் வெள்ள இடரின்போது, மன்னார் மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் பொதுப்பணிகளில் ஈடுபட்ட இளைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். இவர்களுக்கு உலர் உணவுப்பொதிகளும் வழங்கப்பட்டன. நிகழ்வில் மாந்தை மேற்கு உதவிப் பிரதேச செயலர், நானாட்டான் பிரதேசசபையின் தவிசாளர், மதத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-56)



திருநெல்வேலி முத்துமாரி அம்மன் ஆலயத்தின் இரண்டாம் நாள் திருவெம்பாவைப் பூசையில் சுவாமி காராம்பசு வாகனத்தில் எழுந்தருளி வீதிவலம் வந்தார். (ச-17)



# இடர் நிவாரணத்தில் பாரபட்சம்; வவுனியாவில் கவனவீர்ப்பு!

வவுனியா, ஜன.1

வெள்ள நிவாரணக் கொடுப்பனவில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாகத் தெரிவித்து வவுனியா, கூடுவெந்தபுலவு கிராம மக்கள் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

வவுனியா, கூடுவெந்தபுலவு கிராம அலுவலர் அலுவலகம் முன்பாக குறித்த கவனவீர்ப்புப் போராட்டம் அண்மையில் இடம்பெற்றது.

வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட 25,000 ரூபா கொடுப்பனவு பாதிக்கப்படாதவர்களுக்கு வழங்கப்பட்டதாகவும், பாதிக்கப்பட்ட பலருக்குக் குறித்த கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனவும் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், ஊழலை ஒழிப்பதாகக்கூறிய அரசாங்கத்துக்கு நாம் வாக்களித்தோம். முன்னைய காலங்களைப் போல் அல்லாமல் பாரபட்சமற்ற முறையில் குறித்த நிவாரணங்களை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-இ)

# நன்னீரைப் பாதுகாப்பதற்கு குளங்களைச் சீரமையுங்கள்!

## வேலணைப் பிரதேசசபையில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜன.1

புதிய நீர்த்தேக்கங்களை அமைக்க நடவடிக்கை எடுப்பதை விடுத்து வேலணை மண்கும்பானில் ஏற்கனவே இருக்கின்ற சீரமைக்கப்படாத குளங்களைச் சீர்செய்து தீவகத்தின் நன்னீர் நிலைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனத் தீவக முன்னேற்றக்கழகத்தின் தலைவரும் பிரதேச சபையின் உறுப்பினருமான சுவாமிநாதன் பிரகலாதன் தெரிவித்துள்ளார். வேலணைப்பிரதேசசபையில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மண்கும்பானில் ஏற்கனவே பிரதேசசபைக்குரிய 5 குளங்கள் இருக்கின்றன. இவற்றில் இரு குளங்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன. ஏனையவையும் கடுமையான பாதிப்புகளுடனேயே இருக்கின்றன. இவற்றைச் சீரமைத்தால் மண்கும்பானில் மழைக் காலங்களில் ஏற்படும் பிரச்சினைக்கும் ஓரளவு தீர்வு காணமுடியும்.

அதுமட்டுமல்லாது இது விவசாயத் தேவைகளுக்கும் சாதகமாக அமையும். நன்னீர் வளம்மிக்க எமது மண்கும்பானில் மழைநீரை அதிகளவில் சேகரித்தால் மேலும் நன்னீர் இருப்பை மேம்படுத்திக் கொள்ளலாம்.

இதைவிடுத்து இருக்கின்ற நீர்நிலைகளை கைவிட்டு புதியவற்றை உருவாக்க முயற்சிப்பது ஏற்றுக்கொள்ள முடியாது -என்றார். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சத்ஜன அறக்கட்டளையால்
# கிராம உத்தியோகத்தர் ஸ்ரீபாலினி உயர்விருது வழங்கிக் கௌரவிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 1
சத்ஜன கலாசார அறக்கட்டளையால் வருடாந்தம் வழங்கப்படும் உயர் விருதுகளில் ஒன்றான, 'லங்காமாதா தேசகௌரவ கீர்த்தி விருது' கிராம உத்தியோகத்தர் ஸ்ரீபாலினிக்கு வழங்கப்பட்டுள்ளது.
ஜே/124 பிரிவு கிராம உத்தியோகத்தரான ஸ்ரீபாலினி கனகலிங்கம், சிறப்பான அரச கடமை மற்றும் சமூக சேவைக்காகவே இந்த விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். (ம-26)

# சத்ஜன கலாசார அறக்கட்டளையால் பதிவாளர் வரலக்ஷ்மிக்கு உயர்விருது



யாழ்ப்பாணம், ஜன. 1
சத்ஜன கலாசார அறக்கட்டளையால் வருடாந்தம் வழங்கப்படும் உயர் விருதுகளில் ஒன்றான, 'வீரமாதா தேசமான்ய அபிமானி விருது' பதிவாளர் திருமதி வரலக்ஷ்மி சோமசூரியசிங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.
அநுராதபுரத்தில் கடந்த 27ஆம் திகதியன்று இந்த விருது வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.
சர்வஜன மதகுருமார்கள், துறைசார் திணைக்கள பிரதிநிதிகள் உட்பட பலர் இந்த விருது வழங்கும் விழாவில் கலந்து சிறப்பித்தனர். (ம-26)



சாவகச்சேரிப் பிரதேசசபையின் சரசாலை பொதுநூலகத்தின், தேசிய வாசிப்புமாத பரிசளிப்பு விழா, மட்டுவில் கமலாசனி வித்தியாலய மண்டபத்தில் சுப்பையா அரங்கில் கடந்த வாரம் இடம்பெற்றது. நிகழ்வில் விருந்தினர்கள் நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன், மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (க-159)

# மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் இலட்சியப் பாதையில் பயணிப்போம்

## கஜேந்திரன் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஜன.1**
**மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் இலட்சியம் தமிழர் தேசம் ஒன்றுபட்டு தமிழ்த்தேசம் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தீர்வு எட்டப்பட வேண்டுமென்பதாகும். அந்த நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக நாம் பயணிக்கவேண்டும் என்று செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.**

சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 20ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கொக்குவிலியிலுள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெற்றது.
இதில் கலந்துகொண்டு நினைவுரை ஆற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், பிரதேசவாதங்களைக் கடந்து தமிழர் தேசம் ஒற்றுமையாகப் பயணிக்கவேண்டும் என்பதற்காக அர்ப்பணிப்புடன் உழைத்து வந்தவர் ஜோசப் பரராஜசிங்கம். அவரது இழப்பு சிங்கள பௌத்த இனவாதிகளின் நிகழ்ச்சி நிரலுக்குள் நின்றுகொண்டு பிரதேசவாதம் பேசி வடக்கு-கிழக்கைப் பிரித்த தரப்புகளுக்குக் கிடைத்த ஒரு வெற்றியாக அமைந்திருந்தது. அவர் எங்களை விட்டுப் பிரிந்த நாளிலிருந்து எமது கட்சி நேர்மையாகச் செயற்பட்டுவருகிறது. தமிழர் தேசத்துக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுப்பது தான் அவருக்கான உண்மையான அஞ்சலியாக இருக்கும்- என்றார். (ச-66)

# தீயில் எரிந்து ஒருவர் இறப்பு

யாழ்., ஜன. 1
யாழ்ப்பாணம் குருநகர் பகுதியைச் சேர்ந்த நபரொருவர் தீயில் எரிந்து உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-26)



நீர்வேலி பாலர் பகல் விடுதி முன்பள்ளியின் கலைவிழா கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் முன்பள்ளிச் சிறுவர்களின் கலைவிழா மற்றும் பரிசில் வழங்கல் என்பன இடம்பெற்றன. (க-17)

# வெண்கரம் அமைப்பினரால் மாணவர்களுக்குக் கையேடு

யாழ்ப்பாணம், ஜன.1
வெண்கரம் அமைப்பினரால், டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குக் கற்றல் கையேடு வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வெண்கரம் அமைப்பின் சித்தங்கேணி அலுவலகத்தில், அமைப்பின் பிரதான செயற்பாட்டாளர் மு.கோமகனால் முதற்கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. வெண்கர அமைப்பின் செயற்பாட்டாளர்களால், தன்னார்வ ரீதியாக மக்களிடம் சேகரிக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி, தயாரிக்கப்பட்ட கற்றல் கையேடுகள் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளன. ஆரம்ப நிகழ்வில் சங்கானை கல்விக் கோட்டத்தின் முன்னாள் கல்விப் பணிப்பாளர் நொபேட் உதயகுமார், வலிகாமம் கல்வி வலய ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் சுகுணா, பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-27)




# மரண அறிவித்தல்

தோற்றம்
10 . 02 . 1947



மறைவு
31 . 12 . 2025

## திருமதி சகுந்தலா தில்லைநாதர்

சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சகுந்தலா தில்லைநாதர் அவர்கள் நேற்று (31.12.2025) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அப்பாபிள்ளை - நல்லிநாச்சான் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அப்பாபிள்ளை தில்லைநாதர் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான பகவதி, பேரம்பலம், பரமசாமி (சின்னத்துரை) மற்றும் கனகசபை (தியாகு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், கனகம்மா மற்றும் நல்லம்மா, இந்திராதேவி, காலஞ்சென்றவர்களான தியாகராசா, ஏகாம்பரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.01.2026) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சங்கத்தானை,
சாவகச்சேரி

தகவல்:
குடும்பத்தினர்
077 087 5057

(CS/60290) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆங்கிலப் புத்தாண்டு ராசிபலன்




எங்கும் எதிலும் முதலிடத்தைப் பிடிப்பவர்களே, எதையும் வித்தி யாசமாக செய்து முடிப்பவர்களே!

உங்கள் ராசிக்கு 2ஆம் வீட்டில் சந்திரன் நிற்கும் போது இந்த ஆங்கிலப் புத்தாண்டு பிறப்பதால் பிரிந்திருந்தவர்கள் ஒன்றுசேர்வீர்கள். குடும்பத் தில் சந்தோஷம் அதிகரிக்கும். பழைய பிரச்சினை கள் தீரும். இங்கிதமாகப் பேசி சில காரியங்களை முடித் துக்காட்டுவீர்கள். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். பிரபலங்கள், வேற்று மொழி பேசுபவர்களால் ஆதாயமடைவீர்கள்.

1.1.2026 முதல் 31.5.2026 வரை குருபகவான் ராசிக்கு 3 ஆம் வீட்டில் நிற்பதால் குடும்பத்தினருடன் விட்டுக்கொடுத்துப் போகவும். யாருக்காகவும் சாட்சிக் கையெழுத்திட வேண்டாம்.

1.6.2026 முதல் 14.10.2026 வரை குருபகவான் ராசிக்கு 4ம் வீட்டுக்குச் செல்வதால் சேமிப்புகள் கரையும். புது வீடு மாறுவீர்கள். தம்பதிக்குள் விட்டுக்கொடுத்து போவது நல்லது. 14.10.2026 முதல் 31.12.2026 வரை குருபகவான் உங்கள் ராசிக்கு 5ம் வீட்டுக்குச் செல் வதால் சொந்த வீடு மற்றும் உயர்தர வாகனம் அமை யும். வீட்டில் அடுத்தடுத்து சுபநிகழ்ச்சிகள் நடக்கும்.

1.8.2026 முதல் 2.9.2026 வரை மற்றும் 6.11.2026 முதல் 22.11.2026 வரை உங்கள் ராசிக்கு 6ம் வீட்டில் சுக்கிரன் மறைவதால் தம்ப திக்குள் கருத்து மோதல்கள் வரும். வழக்குகளில் கவ னம் தேவை. உங்கள் ராசி நாதன் செவ்வாய், யோகாதி பதி சூரியனுடன் சேர்ந்திருக் கும் நேரத்தில் இந்த வருடம் பிறப்பதால் சிலருக்கு பூர்வீ கச் சொத்து கைக்கு வரும்.

ஏழரைச்சனியில் விரயச்சனி நடைபெற்றுக் கொண்டி ருப்பதால் செலவுகள் அதிகமாகும் வெளிநாடு போக விசா கிடைக்கும். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். அக்கம்பக்கத்தினரை அனுசரித்துச் செல் வது நல்லது. டிசெம்பர் 4ஆம் திகதி வரை உங்கள் ராசிக்கு 5ம் வீட்டில் கேது நிற்பதால் பிள்ளைகளின் நட்பு வட்டத்தை கண்காணியுங்கள். பூர்வீகச் சொத்து விஷ யமாக அலையவேண்டாம். 11 ஆம் வீட்டில் ராகு நிற்ப தால் பணம் வரும்.

கொடுத்து ஏமாந்துப் போன தொகையில் ஒரு பகுதி கிடைக்கும். உத்தியோகத்தில் பணிச்சுமை இருந்தாலும், சின்னச்சின்ன சலுகைகள் கிடைக்கும். புதுப்பொறுப்புகள் தேடி வரும். கேது 4ம் இடத்துக்கு வருவதால் அம்மா வுக்கு மருத்துவச் செலவுகள் உண்டு.

இல்லத்தரசிகளுக்கு குடும்பத்தில் சின்னச் சின்ன கோப, தாபங்கள் வரும். உடல் ஆரோக்கியத்தில் மெத்தனமாக இருக்காதீர்கள். யோகா, தியானம் செய்வது நல்லது.

கன்னிப் பெண்களுக்கு மனக்குழப்பங்கள் நீங்கும். முக்கியமான முடிவு தொடர்பாக பெற்றோரிடம் கலந்து ஆலோசிப்பது நல்லது. மாணவ, மாணவிகளுக்கு படிப் பில் ஆர்வம் பிறக்கும்.

வியாபாரத்தில் வருடப் பிற்பகுதியில் நல்ல லாபம் ஈட்டுவீர் கள். சந்தை நிலவரப்படி கொள்முதல் செய்வீர்கள். பழைய பாக்கிகளை கனிவாகப் பேசி வசூலியுங்கள். அனுபவமி குந்த பணியாட்களை சேர்ப்பீர்கள். உணவு, எலட்ரா னிக்ஸ், இரும்பு வகைகளால் இலாபமடைவீர்கள். அவ் வப்போது உரசல் போக்கு வரும்.

உத்தியோகத்தில் இனி உங்களுக்கான அங்கீகாரம் கிடைக்கும். மேலதிகாரி உங்களுக்கு இணக்கமாக இருப்பார்.

தடைபட்ட சம்பள உயர்வு, பதவி உயர்வு எல்லாம் வருட பிற்பகுதியில் கிடைக்கும். கணினித் துறையினருக்கு வெளிநாட்டில் வாய்ப்புகள் கிடைக்கும். கூடுதல் நேரம் வேலை பார்க்க வேண்டி வரும்.

கலைத்துறையினருக்கு மனப்போராட்டம், கலக்கம் விலகி உற்சாகம் பிறக்கும். தள்ளிப் போய்க் கொண்டி ருந்த வாய்ப்புகள் இனி உங்கள் கதவை தட்டும். மொத் தத்தில் இந்த 2026ஆம் ஆண்டு விடா முயற்சியாலும், தொலைநோக்குச் சிந்தனையாலும் வெற்றி பெற வைக்கும்.

**பரிகாரம்: அருகே உள்ள முருகப் பெருமான் கோயி லில் ஏதாவது ஒரு சஷ்டி திதியில் நெய் தீபமேற்றி வணங்குங்கள். தடைகள் விலகி சாதிப்பீர்கள்.**




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




மலரும் புத்தாண்டே! மலர்க மகிழ்வு தர!
மறக்கவொண்ணா துயர்தந்த ஆண்டதுவும் விடைபெறவே
மலரும் புத்தாண்டே! மலர்ச்சி தந்திடுக!
மாற்றம் பெற்றிந்த மாநிலம் மீண்டும் எழ!
மலரும் புத்தாண்டே மலர்க விடிவுதர!
மக்கள் நலம் காக்கும் தீர்வுகள் தந்திடவே!
மலரும் புத்தாண்டே! மனங்கள் நிறைவுபெறும்
மகத்தான ஆண்டாக விளங்கிடவே மலர்க நீ!

**நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்**

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்




**உதயா ஜுவல்லர்ஸ்**

பொன்நகையும் புன்னகையும் பெண்ணின் பெருமையே



அதி நவீன டிசைனுக்கேற்ப நம்பமுடியாத விலைக்கழிவுகள் வழங்கப்படும்.
குறிப்பிட்ட நகைகள் தங்க விலைக்கே சேதாரம் இல்லாமல் வழங்கப்படும்.

**நியூ உதயா ஜுவல்லர்ஸ்**

இல: 91, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
No: 91, Power House Road, Jaffna.




79G கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 074 069 4449 / 021 222 4434
uthayaajewellerss@gmail.com
uthayaa jewellerss
Tel: 021 222 2031
e-mail: newuthayajwellrs@gmail.com

அனைவருக்கும் 2026 புதுவருட வாழ்த்துக்கள்

**AHUJA Original**

யாழ்ப்பாண முகவர்



1. PARTY BOXES
2. வீட்டு பாவனை பொருட்கள்
3. இலத்திரனியல் உதிரிப்பாகங்கள்

ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்

தரமானதும் பொருட்களை உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள ஒரே இடம்

**V.K.RAJARATNAM**

No.1-C, Stanley Road, Jaffna.
Tel:021 222 5973

இல. 200, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel:021 222 2056

அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

**கிருபா லேணர்ஸ்**
**KIRUBAA LEARNERS கிරුබා ලර්නර්ස්**

அரச அங்கீகாரம் பெற்ற வடக்கின் முதல் தர சாரதி பயிற்சிப் பாடசாலை

- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படும்.



தற்போது வேலணையிலும்
077 222 7121

HOTLINE
077 722 5292




தலைமையகம்
36, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6656 / 0767 22 5292
kirubaalearners@gmail.com
www.kirubaalearners.com

| | | | |
|---|---|---|---|
| யாழ் நகர் 021 222 4353 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 077 120 5576 | சுன்னாகம் 021 224 2022 |
| விஸ்வமடு 077 8585 263 | மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமையின் சின்னமாக புத்தாண்டில் ஒன்றுபடுவோம்

## புத்தாண்டு வாழ்த்துச்செய்தியில் மன்னார் ஆயர் தெரிவிப்பு



மன்னார்,ஜன. 1
எங்களிடத்தில் உள்ள பிரிவினைகள் எல்லாம் நீங்கி புதிய வருடத்தில் நாங்கள் புதிய உணர்வோடு புதிய சமூகமாக ஒற்றுமையின் சின்னமாக எல்லோரும் ஒன்று பட்டு வாழ அழைக்கின்றோம் என மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

புத்தாண்டு பிறப்பையொட்டி அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:
2025ஆம் ஆண்டில் எமக்கு ஏற்பட்ட பேரழிவு நாடு முழுவதையும் அவலத்துக்குள்ளாக்கியுள்ளது. எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து இந்த அவலத்தில் இருந்து மீள்வதற்கு ஒன்றாகப் பாடுபட வேண்டும்.

புதிய வாழ்வைப் பெற்றுக்கொள்ளவே ஆண்டவர் எமக்கு இன்னும் ஒரு புதிய ஆண்டைத் தந்திருக்கின்றார். 2026 ஆம் ஆண்டு ஒரு புதிய ஆண்டாக எங்களுக்குப் பிறந்திருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலே வேதனைகளின் நடுவிலும் ஆண்டவர் நம்மை கைவிடவில்லை என்பதை இந்த ஆண்டு உறுதிப்படுத்துகின்றது. எனவே நாங்கள் ஒவ்வொருவரும் ஒருவருக்கு ஒருவர் உதவி,ஒத்தாசையாக இருக்கவேண்டும். உங்களுக்கு அமைதி,நீதி,நம்பிக்கை உண்மை,அன்பு, நிறைந்த நல்ல ஆண்டாகப் புதிய ஆண்டு அமையட்டும்- என்றார். (ச-56)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DEWMAS 5th Year Anniversary

5 YEARS ANNIVERSARY

## வேலைவாய்ப்புகள் (Vacancies)

| | |
|---|---|
| Office Admin | 077 666 7051 |
| Driver (சாரதி) | 077 927 1122 |
| Accounts Clerk | 077 376 7899 |
| Online Job – Telecalling | 077 046 0096 |
| Data Entry Operator | 077 776 3436 |
| Cashier (காசாளர்) | 077 612 7268 |
| Receptionist | 077 248 7642 |
| Security | 077 776 3436 |
| Manager (முகாமையாளர்) | 077 267 2888 |
| Delivery Riders | 077 077 7031 |
| Social Media Operator | 077 237 8842 |
| Technical Officer (To) | 077 222 5531 |
| Promotion Staff (day 2000/= - 5000/=) | 076 152 6845 |
| Computer Bill Clerk | 077 267 2888 |
| Branch Manager | 076 182 4729 |
| Account Assistant | 077 310 7685 |
| Management Assistant | 077 536 8263 |
| Typing & Designing | 070 655 0754 |
| Office Staff | 070 473 3000 |
| Regional Sales Manager | 076 182 4729 |
| Sales Rep | 077 046 0096 |
| Sales & Collection Officer | 077 786 5502 |
| Security Officer | 021 222 2461 |
| Marketing Executive | 077 358 0547 |
| Student Counselor | 070 691 0952 |
| Pharmacy Assistant | 076 635 0560 |
| Customer handling Officer | 077 313 4909 |
| Office Work | 077 538 6245 |
| Counter Staff | 077 310 7685 |
| Sales Consultant | 077 566 3675 |
| Counter Sales Assistant | 075 221 7661 |
| CCTV Technicians | 076 161 9880 |
| Helpers | 077 501 0821 |
| Medicine store Assistant | 075 221 7661 |
| Nurses | 076 255 5529 |
| Customer Relationship Officer | 077 117 4954 |
| Hotel Manager | 077 540 0779 |
| Video Editor | 077 930 7412 |
| Waiter (Full Time / Part Time) | 077 273 6333 |
| Financial Planner | 076 429 4096 |
| Cook | 076 751 8694 |
| வீட்டுப்பணிப்பெண் | 076 462 1890 |
| Bakery Workers | 077 713 1594 |
| Cleaning Staff | 021 222 2461 |
| Sales Consultant | 077 566 3675 |
| Team Manager | 076 429 4096 |
| English Lecturer | 077 046 0096 |
| Suppliers | 077 612 7268 |
| Photographers (Female) | 076 201 3384 |
| Group Leader | 070 473 3000 |
| Crew Member | 076 764 5665 |
| Operator & Ticket Sales | 077 393 5909 |
| House Keeping | 077 248 7642 |
| Office Assistant | 070 500 2052 |
| Decoration Helpers | 077 775 0318 |
| Chef | 076 070 9751 |
| Production Assistant (Vavuniya) | 077 350 1095 |
| துப்பரவு பணியாளர் | 070 534 6323 |
| Waiter (Kallmunai) | 075 542 2222 |
| கால்நடை வைத்திய அதிகாரி (பெண்) | 074 334 4450 |
| Receptionist (Vavuniya) | 077 350 1095 |
| சமையலறை உதவியாளர் | 076 803 5352 |
| Salesman (Nelliady) | 077 269 1949 |
| தோட்ட வேலை | 077 310 7685 |
| Sales Girls (Killinochchi) | 076 635 0560 |
| மேசன் | 074 074 3787 |
| Accounting Assistant (Vavuniya) | 077 350 1095 |
| கிளை முகாமையாளர் | 077 446 5243 |
| Receptionist (Kilinochchi) | 077 350 1095 |
| வடிவமைப்பாளர் | 077 711 1212 |
| Sales Girls (Vavuniya) | 076 635 0560 |
| வெயிட்டர் | 078 666 7484 |
| Kitchen Hand & Hotel Staff | +61408212460 |
| பாத்திரம் கழுவுபவர்கள் | 076 751 8694 |
| Receptionist | +41762868686 |
| புத்தகம் கட்டுனர் | 077 711 1212 |
| விற்பனை பணியாளர் | 075 858 8218 |
| காசாளர் | 076 751 8694 |
| விற்பனை முகாமையாளர் | 077 386 6565 |
| யூஸ் தயாரிப்பவர் | 077 612 7268 |
| நேஸ் | 077 310 7685 |
| கிளீனிங், Room boy | 074 181 9024 |
| விற்பனையாளர் | 077 855 4840 |
| பாமசி உதவியாளர் | 076 432 2025 |
| விற்பனை பிரதிநிதி | 075 412 5566 |
| பாதுகாப்பு அலுவலர் | 070 534 6323 |
| அணி முகாமையாளர் | 076 429 4096 |
| விற்பனை உதவியாளர் | 077 666 5113 |
| றோல் சுத்துபவர் | 077 267 2888 |
| காசாளர் (பெண்கள்) | 076 255 5529 |
| வியாபார உதவியாளர் | 077 618 3302 |
| ரொட்டி தயாரிப்பாளர் | 076 751 8694 |
| Online Work – Social Media Promoter | 077 598 4925 |
| Management Assistant | 077 386 6565 |
| Receptionist | 077 593 8090 |
| Counter Staff | 077 538 6245 |
| Indian Cook | 076 803 5352 |
| Video Editor – Work from Home | 077 598 4925 |
| Room Boy | 076 131 3000 |
| Social Media Operator | 077 469 6695 |
| Delivery Riders | 077 228 6858 |
| Waiter (வெயிட்டர்) | 077 593 8090 |
| Accounting Assistant | 070 534 6323 |
| Cashier (Female) | 076 284 7795 |
| Waiters | 070 534 6323 |
| Chef | 076 803 5352 |
| Social media Promoter | 076 635 0560 |
| Food Delivery Rider | 070 612 3125 |
| IELTS Lecturer | 077 046 0096 |
| Chef | 077 025 0730 |
| Promotion Staff | 070 755 5755 |
| Cashier | 076 635 0560 |

மேலதிக வேலைவாய்ப்புகளுக்கு : dewmasweb.com

**வேலையாட்கள் தேவையா? 077 77 333 68**

**DEWMAS**, 51, Amman Road, Nallur. 95, Palaly Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.

# மரண அறிவித்தல்



## அமரர் தளையசிங்கம் கமலாம்பாள்

தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தளையசிங்கம் கமலாம்பாள் 31.12.2025 புதன் கிழமை இறையதம் அடைந்தார்.


அன்னார் தளையசிங்கம் சுதர்சன் அவர்களின் அன்பு தாயார் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் வெள்ளிக்கிழமை (02.01.2026) காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கனடா வாழ் நிஷாந்தன்

தொடர்புகளுக்கு சுதர்சன்
0776179148(whatsap)

(CS/28773)R

# கண்ணீர் அஞ்சலி



## அப்பாத்துரை பஞ்சலிங்கம்

(முன்னாள் தலைவர் - யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்)
(2002 / 2003)


அவர்கள் (28.12.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரமடைவதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 08.01.1936 — மறைவு 28.12.2025

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
46, வைமன் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(CS/60348) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 18 . 08 . 1959

மறைவு 31 . 12 . 2025

## திரு. ஏரம்பு இரத்தினசிங்கம்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் மயிலணி வடக்கு சுன்னாகத்தை திருமண பந்த இடமாகவும் கொண்டு வசித்து வந்ததோடு தற்சமயம் 841/1 நாவலர் வீதி, அரியாலையில் வசித்துவரும் திரு. ஏரம்பு இரத்தினசிங்கம் அவர்கள் கடந்த 31.12.2025 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏரம்பு-பரமேஸ்வரி தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து- சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், சதானந்தஈஸ்வரியின் பாசமிகு கணவரும் பத்மலோகன், பார்த்தீபன், சுவர்ணா, தனுராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயாலினி, நிரோஷன், யோகலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனும் ஜெயலட்சுமி, வீரசிங்கம், கனகசிங்கம் மற்றும் காலம் சென்ற வரதலட்சுமி, தர்மகுலசிங்கம், அருந்தவநாதன் ஆகியோரின் சகோதரனும், நகுலேஸ்வரன், தனதீஸ்வரி, கலாதேவி, ஜெகநாதன், ஜெயக்குமார், கனீந்திரன் ஆகியோரின் மைத்துனனும் சிறிவிகா, சிறினிகா, யஸ்விகா, ஆர்த்திகேயன், அனந்திகா, கர்ணிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.01.2026) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்

841/1 நாவலர் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்.

(CS 60347) R

# வேலையாட்கள் தேவை


சுன்னாகத்தில் அமைந்துள்ள புடவையகத்திற்கு வேலை தெரிந்த,பழக விரும்பும் ஆண்/பெண் வேலையாள் தேவை.
(சுன்னாகத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது)
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 076 632 3554

(CS 28756) E

# 40ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 13 . 01 . 1955



அறியாய அழைப்பு 01 . 01 . 1986

## அமரர் ஜெறோம்பிள்ளை அருள்நேசன்

அன்பாய் அரவணைத்து

அறிவுரைகள் பல கூறி விகடமாய் பேசி

எமையெல்லாம் மகிழ்வித்து விட்டு

எங்கு சென்றீர்கள் அப்பா...

நாற்பது ஆண்டுகள் சென்றிருந்தாலும்

என்றும் உங்கள் நினைவுகள் எம் நெஞ்சத்து விட்டகலாது

இல. 49, D8 உருத்திரபுரம்,
கிளிநொச்சி.
தற்காலிக முகவரி:
இல.27, மார்டீன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS/60319) J-1

# 31ம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 14 . 11 . 1974



விண்ணில் 04 . 12 . 2025

கடந்த (04.12.2025) வியாழக்கிழமை அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத்தலைவி

## அமரர் பிறேமினி திருக்குமார்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (01.01.2026) வியாழக்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் (03.01.2026) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு துயருற்று இருந்த வேளையில் பல வழிகளிலும் உதவி புரிந்த அன்பு நெஞ்சங்களுக்கும், நேரில், தொலைபேசி, சமூக ஊடகங்களுடாக ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக்கிரியையில் கலந்து கொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இல. 40, செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(CS/28771) J-1

குடும்பத்தினர்
077 305 8033


## ரஷ்யாவின் வெற்றி உறுதி!

உக்ரைனுக்கு எதிரான போரில், ரஷ்யா நிச்சயம் வெற்றி பெறும் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை என அதிபர் விளாடிமிர் புடின் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். ரஷ்யாவின் அதிபராகப் புடின் பொறுப்பேற்று இன்றுடன் 26 ஆண்டுகள் நிறைவடைந்துள் என. இதை முன்னிட்டு அவர் விசேட வீடியோவொன்றை வெளியிட்டுள்ளார். அந்தப் பதிவிலேயே, உக்ரைனுக்கு எதிராக போரில் ரஷ்யா நிச்சயம் வெற்றிபெறும் என்று கூறியுள்ளார். 'ரஷ்யா இன்னும் தனது இராணுவப் பலத்தை வெளிப் படுத்தவில்லை' என்றும் புடின் குறிப்பிட்டுள்ளார்.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 09.07.1942 — மறைவு 24.12.2023

## சுப்பிரமணியம் சங்கரப்பிள்ளை (குணம்)

(பரம்ஸ் மோட்டோர்ஸ் அன்ட் ரான்ஸ்போர்ட்)


ஏனியாக நின்று எம்மை ஏற்றிவிட்டவரே.....
தோனியாக நின்று துறைமுகம் காட்டியவரே
வாழ்வதற்கு இலக்கனமாய் வாழ்ந்து காட்டிய தெய்வமே
இன்னும் சிலகாலம் எம்மோடு வாழ மறந்ததேன்?
இரண்டு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன?

கண்டுவில் வீதி
சாவகச்சேரி

குடும்பத்தினர்
077 774 3350

(CS 60336) E

# மரண அறிவித்தல்



தோற்றம் 17.06.1944 — மறைவு 31.12.2025

## சின்னத்தம்பி பாலசுப்பிரமணியம்

கலட்டியைப் பிறப்பிடமாகவும் இல 21, 5 ஆம் ஒழுங்கை, அரசடி வீதி கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (31.12.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - முத்து தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான தம்பு - கற்பகம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற வள்ளியம்மையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தெய்வநாயகி மற்றும் கஜேந்திரன், வாசுகி, சிவதர்சினி, மயூரன், கரிசினி, சுரேஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருபாகரன், வசந்தகுமார், சத்தியப்பிரியா, நிமலகாந்தன், வனஜா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.01.2026) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல 21,
5 ஆம் ஒழுங்கை,
அரசடி வீதி,
ஆறுகால்மடம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CR 60340) E

# 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அல்பிரட் ரவிராஜ்

பிறப்பு 06.10.1994 — இறப்பு 01.01.2018







புத்தாண்டு பிறந்த அந்த நாளில்
புன்னகையற்று நீ சென்றாய்
திரும்பி வருவாய் என்ற நம்பிக்கையுடன்
நாங்கள் காத்திருந்தோம்
ஆனால் விதி வேறோரு வழி எழுதிவிட்டது
உன் உடல் மண்ணில் உறங்கினாலும்,
உன் அன்பு என்றும் எங்கள் உள்ளங்களில்

ஈச்சமோட்டை
குடும்பத்தினர்

# 83 வது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



பிறப்பு 01.01.1943 — இறப்பு 20.05.2005

## ஆறுமுகம் இராஜகோபால்

(செம்பியன் செல்வன்)


காலங்கள் புயலின் வேகத்தை விட கூடியது
காலங்கள் மனித செயற்பாட்டால்
உயர்வு தாழ்வு அடைகின்றது.
காலங்கள் காலநாய் மாறும் போது
காப்புறுவது மனித அறிவு
காலத்தில் ஏற்படும் மகிழ்வை ஏற்பது போல்
துன்பத்தையும் ஏற்போம்
காலத்தில் உங்கள் எழுத்து உலகை வாழ்வும் பதிந்து விட்டது.

மகள் - ராகுலன்
மனைவி - புவனம்

10 புதுவீதி அத்தியடி
யாழ்ப்பாணம்

(CS 60268) E

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12.04.1938 — மறைவு 12.01.2025

## அமரர் சிதம்பரப்பிள்ளை தர்மலிங்கம்

திதி : திரியோதசி (01.01.2026)

ஒரு ஆண்டு கழிந்ததப்பா நாள்
தோறும் உங்கள் நினைவுகளுடன்
நாங்கள் இங்கே வாழ்கின்றோம்
எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் மறையாதப்பா...

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.


தாழையடிதுரவு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(CR 46809) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




(CS 60343) E

**21.12.2025 அன்று முதலாம் கறுப்புப்பட்டியை பெற்ற உ.தமிழ்வர்ணன், உ.நிதர்சன் ஆகிய இருவரையும் பாராட்டி வாழ்த்துவதோடு அவர்கள் மென்மேலும் பல விருதுகளை பெற வாழ்த்துகின்றோம்.**

வாழ்த்துவோர்: **ஆசிரியர் த.தங்கேஸ்வரன்**
**Black Belt 3rd Dan**

# 20ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
24 . 06 . 1946



உதிர்வு
12 . 01 . 2006

## அமரர் சின்னத்தம்பி நடராசா
**(ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)**

கண்ணை இமை காப்பது போல்
நிதம் எமைக்காத்த அப்பா
நிழலாக மாறியதை - இன்றும்
நினைத்து நாம் ஏங்குகின்றோம்
அலைபாயும் நினைவலைகள்
இருபது ஆண்டுகளாய் எம் இதயத்தில்

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

குடும்பத்தினர்.

(CS 46816) E

## சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)
## மில் மோட்டர்கள் விற்பனை

எமது சங்கத்தில் மில் மோட்டர்கள் ஆறு (06) பகிரங்க கேள்விப்பத்திரங்கள் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளதனால் தேவைப்படுவோர் தங்களது கூறுவிலைகளை மூடிய கடிதவுறையில் குறிப்பிட்டு "பொதுமுகாமையாளர் சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வ-து) காங்கேசன்துறை வீதி சுன்னாகம்" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்க முடியும். மேலும் பொருட்களை பார்வையிட விரும்புவோர் வேலை நாட்களில் காலை 09.00 மணியிலிருந்து மாலை 04.00 மணிவரை சங்கத்தில் பார்வையிடலாம். விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 17.01.2026ம் திகதி மதியம் 12.00 அதற்கு பின்னர் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதை அறியத்தருகின்றோம். விண்ணப்பப் படிவங்களை சங்கத்தில் வேலை நாட்களில் ரூபா 1000/= செலுத்தி பெற்று விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மில் மோட்டர்களின் விபரம்

01) 15 HP மில் மோட்டர் நான்கு (04)
02) 30 HP மில் மோட்டர் ஒன்று (01)
03) 5 HP மில் மோட்டர் ஒன்று (01)

மேலதிக விபரங்களுக்கு சங்க பொதுமுகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.
தொலைபேசி இலக்கம் : **0773170720**

பொது முகாமையாளர்
சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்(வ.து), சுன்னாகம் 01.01.2026

(CR/46811) J-1

WUSC EUMC

### ஆர்வ வெளிப்பாடு (Expression of Interest – EOI)
### GRIT திட்டத்தின் சமூக சந்தைப்படுத்தல் பிரச்சாரத்திற்கான உள்ளடக்க உருவாக்குநர்கள்

கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவனம் (World University Service of Canada – WUSC) என்பது முன்னணி சர்வேதச அபிவிருத்தி அமைப்பாகும். இது பொருளாதார வளர்ச்சி, பால்நிலை சமத்துவம் மற்றும் இளைஞர் வலுவூட்டலை முன்னேற்றுவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது. ஒவ்வொரு இளைஞரும் வளர்ச்சி அடைந்து, சமூகத்தில் தங்களுக்கான இடத்தை உணரக்கூடியதோர் உலகமே WUSC இன் தூரநோக்கமாகும். இளைஞர்களுக்கான கல்வி மற்றும் பொருளாதார வாய்ப்புகளை மேம்படுத்துவதே இதன் பணிநோக்காகும்.

தற்போது தேசிய மற்றும் உள்ளூர் பங்காளர் நிறுவனங்களுடன் இணைந்து, WUSC நிறுவனமானது Growth, Resilience, Investment and Training (GRIT) திட்டத்தை (2023–2029) நடைமுறைப்படுத்தி வருகிறது. இத் திட்டமானது, வட மாகாணத்திலுள்ள தொழில்முனைவாளர்களுக்கு, பால்நிலை உணர்திறன்வாய்ந்த தொழில்முயற்சி வாய்ப்புகளை ஏற்படுத்துகின்ற, ஓர் சூழல் கட்டமைப்பை உருவாக்குவதையும் வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

GRIT திட்டத்தின் ஒரு பகுதியாக, பெண்களின் தொழில்முனைவு பங்கேற்பு மற்றும் தலைமைத்துவத்தைத் தடுக்கும் ஆழமாக வேரூன்றிய சமூக விழுமியங்கள், நம்பிக்கைகள், மனப்பாங்குகள் மற்றும் நடத்தை முறைகளை நேர்மறையாக மாற்றுவதற்காக சமூக சந்தைப்படுத்தல் பிரச்சாரத் திட்டத்தினை (2025–2028) உருவாக்கியுள்ளது.

கொள்கை மற்றும் திட்ட ஆதரவு இருந்தாலும், வட மாகாணத்தைச் சேர்ந்த பெண்கள் சமூக களங்கம், குடும்ப ஆதரவின்மை, போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் மற்றும் நிறுவனப் பாகுபாடு போன்ற சவால்களை இன்னும் எதிர்கொண்டு வருகின்றனர். இவை ஒரு தொழிலை தொடங்குவதற்கும் மற்றும் விரிவாக்கி வளர்ச்சியடைவதற்கும் பெரும் தடையாக உள்ளது.

இந்த ஆர்வ வெளிப்பாடு (EOI) மூலம், சமூக சந்தைப்படுத்தல் பிரச்சாரத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட கூறுகளுக்கான உள்ளடக்கங்களை உருவாக்கவும், வடிவமைத்து செயல்படுத்தவும் WUSC உடன் இணைந்து பணியாற்ற தகுதியான குழுக்கள், உள்ளடக்க உருவாக்குநர்கள், ஊடகவியலாளர்கள், குறுந்திரைப்படம் மற்றும் கதை சொல்வதன் மூலம் சமூக மாற்றங்களை ஏற்படுத்துவோர் நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் அழைக்கப்படுகின்றனர். இந்த பணியளிப்பு, பெண்களின் தொழில்முனைவினை மதிப்புமிக்க, விரும்பத்தக்க மற்றும் சட்டப்பூர்வமான தொழில் பாதையாக மாற்ற உதவும் புதுமையான, பண்பாட்டு உணர்வுள்ள உள்ளடக்கங்கள் மற்றும் பிரச்சார தயாரிப்புகளை சோதனை முறையில் செயல்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.

இந்த EOI அழைப்பின் முழு விவரங்களைப் பெறுவதற்கு கீழ்காணும் இணைப்பைப் பயன்படுத்தலாம்.

https://wusc.bamboohr.com/careers/220?source=aWQ9MjE%3D

விண்ணப்பம் சமர்ப்பிக்கும் கடைசி நாள்: 18 ஜனவரி 2026, நள்ளிரவு 12.00 மணி (இலங்கை நேரம்)

தங்களது ஆர்வ வெளிப்பாட்டை (EOI) கீழ்காணும் தலைப்புடன் grit.rfp@wusc.ca என்ற மின்னஞ்சலுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்:

Subject: EOI - GRIT Social Marketing Campaign

விண்ணப்பங்கள், முடிவுத் திகதிக்கு முன்னர் , ஆங்கிலம் அல்லது தமிழ் மொழியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். WUSC, அனைவரையும் உள்ளடக்கும் மற்றும் வெளிப்படையான கொள்முதல் செயல்முறைக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள நிறுவனமாகும். பட்டியலில் தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், மேலதிக கலந்துரையாடல்களுக்காகவும், விரிவான தொழில்நுட்ப மற்றும் நிதி முன்மொழிவை சமர்ப்பிக்கவும் அழைக்கப்படுவர். மேலதிக தகவல்கள் அல்லது விளக்கங்களுக்கு, கீழ்காணும் மின்னஞ்சல் முகவரியை தொடர்பு கொள்ளவும்: grit.rfp@wusc.ca

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிரதேச சபை
# නල්ලූර් ප්‍රාදේශීය සභාව
# NALLUR PRADESHIYA SABHA

## பொது அறிவித்தல் - 2026

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்களும் வர்த்தக நிலைய உரிமையாளர்களும் அரச தனியார் நிறுவனங்களின் தலைவர்களும் 2026.01.01ஆம் திகதி முதல் எமது பிரதேச சபையால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளையும் அறிவித்தல்களையும் பின்பற்றி சபையின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியுதவுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

01. ஆதன வரி

2026ஆம் ஆண்டுக்கான ஆதன வரியினை தங்களுக்குரிய உப அலுவலகத்தில் அதாவது ஆடியபாதம் வீதி திருநெல்வேலியில் அமைந்துள்ள நல்லூர் அலுவலகத்திலும் குளப்பிட்டி - ஆனைக்கோட்டை வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள கொக்குவில் உப அலுவலகத்திலும் செலுத்தி சபையின் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வரியிருப்பாளர்களை கேட்டுக்கொள்கின்றேன். இவ் ஆதனவரியை 2026.01.31ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோர் ஆண்டுக்கான மொத்த வரியில் 10% கழிவினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு, ஒவ்வொரு காலாண்டிற்குரிய வரியை குறித்த கந்தாயத்தின் முதல் மாதம் முடிவதற்குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதன வரியை செலுத்த தவறின் விறாந்துக்கட்டணமாக (தண்டம்) வெற்றுக்காணி அல்லது வதிவிட ஆதனங்களுக்கு 15% உம் ஏனைய ஆதனங்களுக்கு 20% உம் ஆதன வரியுடன் சேர்த்து மேலதிகமாக அறவிடப்படும். எனவே குறித்த ஆதன வரிகளை 2026.01.31ஆம் திகதிக்கு முன் எமது உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

02. ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்தல்

எமது சபை நிர்வாகத்திற்கு உட்பட்ட ஆதனங்களை கொள்வனவு செய்பவர்கள் மற்றும் ஏற்கனவே ஆதன உடமையினைக் கொண்டுள்ள போதிலும் எமது சபையின் ஆதன இடாப்பில் பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்கள் எமது உப அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு உரிய நடைமுறையினை பின்பற்றி பெயர் மாற்றத்தினையும் ஆதனத்தில் பௌதீக மாற்றம் ஏற்படுத்தினால் ஆதன பிரிவிடுகை மாற்றத்தினையும் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

03. 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் மற்றும் தொடர்புடைய ஏனைய சட்டங்களின் கீழ் கட்டுமானங்களிற்கான அனுமதிப் பத்திரம் வழங்கல்

i. எமது நிர்வாகத்திற்குற்பட்ட பிரதேசத்தில் கட்டடங்கள், எல்லைச்சுவர், எல்லைத்தூண்கள், தொலைத் தொடர்பு கோபுரங்கள், மலசல கூடங்கள், குழாய் கிணறுகள் போன்றவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது பழைய கட்டடத்தினை திருத்துதல் வேலை செய்வதாயின் பிரதேச சபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து உரிய அனுமதி பெற்ற பின்னரே அமைக்கப்படல் வேண்டும். தவறின் 1978ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

ii. புதிய கட்டட விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் போது மழை நீர் சேகரிப்பிற்கான கட்டுமானங்கள்கட்டாயம் அமைக்கப்படுதல் வேண்டும்

iii. புதிய கட்டடம் அமைப்பதற்கு உரிய அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியாகாதவிடத்து உரிய கட்டணம் செலுத்தி கட்டட அனுமதியைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

iv. கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் பிரதேச சபையின் உரிய உப அலுவலகங்களுக்கு கட்டடம் பூர்த்தி செய்தமை தொடர்பில் அறிவித்து உரிய கட்டணத்தைச் செலுத்தி அமைவுச் சான்றிதழைப் (COC) பெற்றுக்கொண்ட பின்னரே கட்டடத்தினை பயன்படுத்துதல் வேண்டும். பகுதியாக பூரணப்படுத்தியும் அமைவுச்சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முடியும். அமைவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாமல் கட்டடத்தினை பயன்படுத்தினால் கட்டுமான ஒழுங்கு விதிகளிற்கமைய தண்டப்பணம் செலுத்தநேரிடும்.

v. பொது கட்டடங்கள், மண்டபங்கள் மற்றும் கடைத்தொகுதிகள் அமைக்கும் போது விசேட தேவையுடையோர் பயன்பாட்டிற்கேதுவாக சாய் தளம் (Disable Ramp) மற்றும் விசேடதேவையுடையோருக்கான கழிப்பறை ஆகியவை கட்டாயமாக அமைக்கப்படுதல் வேண்டும்.

vi. தாழ் நிலங்களில் மண் நிரவுதல் தொடர்பாக சபை அனுமதி பெறப்பட்டே மேற்கொள்ளப்பட வேண்டும்.

vii. சபை எல்லைக்குள் குழாய்க் கிணறுகள் அமைப்பவர்கள் உரிய விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து சபையின் அனுமதி பெற்று அமைத்தல் வேண்டும்.

viii. பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக சபை அனுமதியின்றி வீதியோரங்களில் அமைக்கப்படும் நிரந்தர மற்றும் தற்காலிக அலங்கார அமைப்புக்கள் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளன.

04. சூழல் பாதுகாப்பு உரிமம்

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் 1980ம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்பு சட்டத்தின் 23(அ) எனும் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் அடிப்படையில் நல்லூர் பிரதேச சபையின் நிர்வாக பிரதேசத்தில் 2264/18 இலக்க 2022.01.27ஆம் திகதிய அதிவிசேட வர்த்தகமான பத்திரிகையில் விதந்தரைக்கப்பட்ட (ஈ) பிரிவிற்கமைய வியாபாரம் அல்லது தொழில்களிற்கு சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்படுகின்ற பொறுப்பு சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினை பெற்றுக் கொள்ளவும். ஏற்கனவே உரிமத்தை பெற்றுக் கொண்டவர்கள் உரிமம் காலாவதியாகி இருப்பின் அதனை புதுப்பித்துக் கொள்ளவும். வலுவில் உள்ள சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் இல்லாமல் மேற்குறிப்பிட்ட தொழில்களை நடாத்தினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு தண்டப்பணமும் அறவிடப்படும்.

05. வியாபார உரிமம் மற்றும் அனுமதிப்பத்திரம் 2026

இப் பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருள்களை விநியோகிப்போர் 2026ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதிக்குள் உரிய விண்ணப்பங்களை கொக்குவில், நல்லூர் ஆகிய உப அலுவலகங்களில் பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரிய உப அலுவலகங்களில் சமர்ப்பித்து 2026.03.31ஆம் திகதிக்கு முன்னர் உரிய கட்டணங்களை செலுத்தி வியாபார அனுமதிப் பத்திரத்தை (Trade license) பெற்றுக்கொள்ளல் வேண்டும். வியாபார அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பிக்கும்போது விண்ணப்பப்படிவத்துடன் கட்டட அமைவுச்சான்றிதழ் (COC) சமர்ப்பிக்கப்பட வேண்டும். 2026.03.31ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரம் அல்லது வியாபார வரியைச் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது தகுதி வாய்ந்த நீதிமன்றம் ஊடாக உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைக் கவனத்திற்கொள்ளவும்.

06. துவிச்சக்கர வண்டி உரிமம்

துவிச்சக்கர வண்டிகள் வைத்திருப்போர் 2026.03.31ஆம் திகதிக்கு முன் உரிய உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி 2026ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி உரிமங்களைப் பெற்றுக் கொள்ளவும்.

07. மிருகங்களுக்கான உரிமம்

வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 2026.03.31ஆம் திகதிக்கு முன் உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி 2026ஆம் ஆண்டுக்கான மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும்

08. விளம்பரங்கள் அமைத்தல் அல்லது காட்சிப்படுத்தல்

பிரதேசசபை எல்லைக்குள் வர்த்தக நிலையங்களில் அல்லது பொது இடங்களில் அமைக்கப்படும் விளம்பரப் பலகைகளுக்கு பிரதேச சபையின் அனுமதியைப் பெற்றே விளம்பரங்களைக் காட்சிப்படுத்த வேண்டும். வர்த்தக நிறுவனங்களினால் தொகுதியாக அனுமதி பெறப்பட்டு வர்த்தக நிலையங்களில் காட்சிப்படுத்தப்படும் விளம்பரப்பலகைகளினது அனுமதியின் பிரதி ஒன்றினை வர்த்தக உரிமையாளர் கைவசம் வைத்திருத்தல் வேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் அனைத்திற்கும் எதிர்வரும் ஜனவரி மாதம் 31ஆம் திகதிக்கிடையில் உரிய முறையில் விண்ணப்பித்து அனுமதி பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். அனுமதி பெறப்படாது காட்சிப்படுத்தப்பட்டுள்ள விளம்பரங்கள்யாவும் 2026.02.01ஆம் திகதியிலிருந்து பிரதேச சபையினால் எந்தவித முன்னறிவித்தல் ஏதுமின்றி அகற்றப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

09. வீதி ஒழுங்கும் தெருவோர வியாபாரமும்

நல்லூர் பிரதேச சபையினது பிரதேசங்களில் அனைத்து வாகன சாரதிகள் மற்றும் பாதசாரிகள் வீதி ஒழுங்கைப் பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். மேலும் அதிகரித்த போக்குவரத்து காரணமாக விபத்துக்களை தவிர்க்கும் முகமாக வியாபார நிலையங்களிற்கு முன்னால் வாடிக்கையாளர் வாகனத் தரிப்பிடத்திற்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் மற்றும் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது, காட்சிப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

எனவே இவ்விடயங்களில் அக்கறையுடன் அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களை கேட்டுக்கொள்கின்றேன். மேலும் பொது மக்கள் வீதி போக்குவரத்துக்கு இடையூறாக வீதி ஓரங்களில் கல், மண், சல்லி போன்ற கட்டடப்பொருட்கள் சேமித்துக் கொள்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றேன். வீதியோர பெட்டிகடைகள் மற்றும் தற்காலிக வியாபாரங்கள் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளன. நடமாடும் வியாபாரங்களிற்கு மாத்திரம் அனுமதி வழங்க பரிசீலிக்கப்படும். அத்தோடு சுகாதார பிரிவினரின் சிபார்சு பெறப்படாத மற்றும் அனுமதி பெறப்படாத நடைபாதை வியாபாரம் நடமாடும் சுண்டல், சோளம் மற்றும் சிற்றுண்டி விற்பனைக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. இவ் அறிவித்தலை மீறி செயற்படுபவர்களது வியாபார பொருட்கள் பிரதேச சபை உடனடியாக அகற்றப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

10. பொதுச் சுகாதாரத்தைப் பேணுதல்

பராமரிப்பு இன்றி பற்றைகளாக காணப்படும் காணிகளின் காணி உரிமையாளர்களிற்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவே பற்றைகளாக உள்ள காணிகள் உடனடியாக துப்பரவு செய்யப்படல் வேண்டும் என்பதுடன் இதனை மேற்கொள்ள தவறுபவர்களது துப்பரவு செய்யப்படாத ஆதனங்கள் பிரதேச சபையால் தற்காலிகமாக பொறுப்பேற்கப்பட்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக வட்டார ரீதியான கழிவுப்பொருட்கள் சேகரிப்பு நிலையங்களாக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் உணவு வகைகளை கையாளும் வர்த்தக நிலைப் பணியாளர்கள் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் அறிவுறுத்தலிற்கமைய சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவதுடன் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.

11. கழிவுப்பொருட்கள் சேகரிப்பு முறை

1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் பொது மக்களினால் தரம்பிரித்து வழங்கப்படுகின்ற சமயலறைக் கழிவுகள் மட்டும் இலவசமாக அகற்றுவதற்கு சபையால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் ஏனைய கழிவுகள் யாவும் கட்டணம் செலுத்தியே அகற்றப்படுதல் வேண்டும். தரம் பிரித்து வழங்கப்படாத கழிவுப்பொருட்கள் பிரதேச சபையால் அகற்றப்பட மாட்டாது என்பதுடன் அவற்றினை வீதிகளில் வீசுவோர் மீது உரிய கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

பொதுமக்கள் தங்களது வட்டாரத்தில் சபையினால் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கழிவு சேகரிப்பு நிலையங்களில் தரம் பிரிக்கப்பட்ட கழிவுப்பொருட்களை ஒப்படைக்க முடியும். எனவே வீதிகளில் கழிவு வீசாது சுற்றுச்சூழலை தூய்மையாக வைத்திருப்பதற்கு பொதுமக்களும் சபையுடன் இணைந்து உறுதுணையாக செயற்பட வேண்டும்.

மேலும் உணவகங்கள் வர்த்தக நிலையங்கய், ஹொட்டல்கள், வீடுகளை தங்குமிடங்களாக வாடகைக்கு வழங்கியுள்ளோர், அரச, தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள் மற்றும் அல்லது பொது அமைப்புக்கள் பிரதேச சபையில் உரிய பதிவுகளை மேற்கொண்டு கழிவகற்றலுக்கான பதிவு இலக்கத்தினை பெற்றுக் கொள்ளல் கட்டாயமானதாகும். அத்துடன் தங்கள் நிறுவன கழிவுகளை உரிய முறையில் கொள்கலன் களில் தரம்பிரித்து வகைப்படுத்தி அவற்றினை அகற்றுவதற்காக உரிய கட்டணத்துடனான கழிவகற்றல் சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் குறித்த பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் மற்றும் இந்த நடைமுறைகளை பின்பற்ற தவறுவோர் மீது உடனடி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12. டெங்கு நோயின் தாக்கத்தை கட்டுப்படுத்தல்

நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக பிரதேச சபையால் மேற்கொள்ளப்படும் சகல நடவடிக்கைகளிற்கும் பொதுமக்கள் மற்றும் அரச தனியார் நிறுவனங்கள் தங்களது பூரண ஒத்துழைப்பினை வழங்குதல் வேண்டும். அத்துடன் ஒவ்வொரு குடியிருப்பாளர்களும் தங்களது வீடுகள் மற்றும் வீட்டு சுற்றாடலில் நீர் தேங்கி நுளம்பு பெருகுவதற்கு ஏதுவான சிறிய மற்றும் பெரிய அளவிலான கொள்கலன் களை சேரித்து கால அட்டவணைக்கேற்ப பிரதேச சபையின் கழிவகற்றல் வாகனங்களில் ஒப்படைக்க முடியும். இவ் அறிவுறுத்தலை மீறி நுளம்பு பெருக்கத்திற்கு ஏதுவாக சுற்றாடலை வைத்திருப்போர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

13. பொதுச் சந்தை

எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமான விற்பனை நடைமுறை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறும், நிலக்கீழ் விளைச்சல் பொருட்கள் தவிர்ந்த ஏனைய மரக்கறிகளுக்கு கழிவு முறை முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது என்பதும் அறியத்தரப் படுகின்றது. அத்துடன் எந்தவொரு உள்ளூராட்சி அதிகார சபைக்கு சொந்தமான பொதுச் சந்தைச் சுற்றாடலில் இருந்தும் 500 மீற்றர் சுற்று வட்டாரத்தில் கடல் உணவுகள், இறைச்சி வகைகள், மரக்கறிகள், கிழங்குவகைகள், தேங்காய், மற்றும் உள்ளூர் உற்பத்தி பழவகைகள் என்பன விற்பனை செய்வது மற்றும் காட்சிப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. இதனை மீறிச்செயற்படுபவர்கள் மீது தகுதிவாய்ந்த நீதிமன்றம் ஊடாக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

14. இரசாயன மருந்து விசிறிய பழங்கள்

பொது மக்களுக்கு தீங்கு விளைவிக்க கூடிய முறையில் அனுமதியற்ற நியமங்களை மீறி மருந்து விசிறிய பழங்கள் மற்றும் பழுதடைந்த பழங்கள் விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளதுடன் மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

15. கால்நடை வளர்ப்பு மற்றும் கட்டாக்காலிகள்

பொது மக்கள் தமது கால்நடைகளை கட்டி வைத்து வளர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். இதனை மீறும் சந்தப்பங்களில் பொதுவீதியில் அலைந்து திரியும் கட்டாக்காலிகள் சபையால் பிடிக்கப்பட்டு உரிய சட்டங்களின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

16. கழிவு நீர் வாய்க்கால் பராமரிப்பு

பகிரங்க வடிகால்கள் மற்றும் வாய்க்கால்களினுள் வீட்டு கழிவு நீர் மற்றும் வியாபார நிலைய கழிவுநீர் உட்பட எந்தவிதமான கழிவு நீரினையும் விடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. இதனை மீறி செயற்படுபவர்கள் மீது உடனடியாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

17. பொதுப்போக்குவரத்துக் இடையூறாக பெரும் கட்டுமான பொருட்களை பறித்தல்.

பொது வீதியில் சபை அனுமதியின்றி கட்டுமான பொருட்கள் சேகரித்து வைத்திருத்தல் உரிய நடைமுறைகளிற்கமைய குறியீடுகள் காட்சிப்படுத்தாது விடல் மற்றும் டெங்கு நோய்க்காவி பரவக்கூடிய ஆபத்தான முறையில் கட்டுமான இடங்களை வைத்திருத்தல் முற்றாக தவிர்க்கப்படல் வேண்டும்.

18. பாடசாலை ஆரம்பிக்கும் நேரம் மற்றும் முடிவடையும் நேரங்களில் பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக பாரவூர்திகள் பொது வீதியில் பயணிப்பதற்கு தடைவிதித்தல்

வீதிகளில் ஏற்படும் விபத்துக்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதன் அடிப்படையில் வீதிப்போக்குவரத்து நெரிசல்களை குறைக்கும் நோக்கில் முன்பள்ளி மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள் பணிக்கு செல்லும் நேரங்கள் மற்றும் அண்மையில் ஏற்பட்ட வீதி விபத்துக்கள் ஆகியவற்றினை கவனத்தில் கொண்டும், டிப்பர் வகை வாகனங்கள் மு.ப 6.00 தொடக்கம் பி.ப 6.00 மணி வரை ஆடிய பாதம் வீதியூடாக பயணிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய பாரவூர்திகள் மு.ப 7.00 – 9.00 வரையும் பி.ப 12.00 – 2.30 வரை நாயன்மார்கட்டு சந்தியிலிருந்து கொக்குவில் சந்தி வரையான ஆடியபாதம் வீதி ஊடாக பயணிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் 2026.01.01ஆம் திகதி முதல் குறித்த நடைமுறையினை மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேற்படி அறிவுறுத்தல்களை அனுசரித்து நடக்காதோர் மற்றும் அறிவுறுத்தல்களை மீறிச்செயற்படுவோர் மீது வேறு எந்த விதத்திலான அறிவித்தலுமின்றி பிரதேச சபையால் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருவதோடு, "எமது வருங்கால சந்ததிக்காகவும் பிரதேசத்தினது அபிவிருத்திக்காகவும்" நல்லூர் பிரதேச சபையின் அறிவுறுத்தல்களை அனுசரித்து நடக்குமாறு விடயங்களுடன் தொடர்புடைய அனைவரையும் தயவன்புடன் வேண்டிக்கொள்கின்றேன்.

பத்மநாதன் மயூரன்
தவிசாளர்
நல்லூர் பிரதேச சபை
2026.01.01

(CR/46818) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண மாநகரசபை

### யாழ்ப்பாணம் செங்குந்த சந்தைக்கடைகள் Stage 2 குத்தகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கான விலை மனுக்கோரல்

1. யாழ்ப்பாணம் செங்குந்த சந்தைக்கடை, கீழ்வரும் கடைத் தொகுதிகள் குத்தகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கான விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

| கடை இல | அளவு | மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் மூன்று மாத வாடகை (வரி நீங்கலாக) | 20 வருட வாடகை (Key Money) (வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| Stage2- கீழ்தளம் | | | |
| 06 | 146sq.ft | 6,750.00 | 540,000.00 |
| 09 | 124sq.ft | 13,500.00 | 1,080,000.00 |

2. சமர்பிக்கப்படும் விலைமனுக்களில் கோரப்பட்ட அதிகூடிய விலையைக் கவனத்தில் கொண்டு குத்தகைதாரர் தேர்ந்தெடுக்கப்படுவார்.
3. கேள்வி விண்ணப்பம் பெறுபவர் தேசிய அடையாள அட்டைப்பிரதி மற்றும் வதிவிடத்தினை உறுதிப்படுத்தும் கிராமசேவை உத்தியோகத்தரது கடிதம் என்பன சமர்ப்பிக்க வேண்டும்.
4. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவே ஏற்பதற்கும் நிராகரிப்பதற்கும் கேள்விசபைக்கு அதிகாரம் உண்டு.
5. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற விண்ணப்பதாரிகள் குறித்த விபரங்கள் உள்ளடக்கிய விண்ணப்பங்களை, மீளளிக்கப்படாத ரூபா 1,000.00 + vat 18% இனை செலுத்தி மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில் 01.01.2026 ஆம் திகதி முதல் 14.01.2026 ஆம் திகதி வரை வாரத்தில் வேலை நாட்களில் மு.ப 9.00 முதல் பி.ப 2.30 வரையான காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.
6. விண்ணப்பதாரர் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் தொகையை பிணைமுறியாக செலுத்துதல் வேண்டும்.
7. விலை மனுக்களை ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும் / நானாவித இறைவரிப்பகுதியில் கேள்விப் படிவங்களை ஏற்கும் பெட்டியில் இடுமாறு கோரப்படுகின்றது. அத்துடன் தபால் உறையின் மேல் மூலையில் கேள்வியின் விபரம் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
8. விலை மனுக்களை ஏற்றல் 16.01.2026 ஆம் திகதி மு.ப10.00 மணிக்கு முடிவடைந்ததுடன் மாநகர சபையின், பௌதிக திட்டமிடல் கேட்போர் கூட்டத்தில் 16.01.2026 ஆம் திகதி மு.ப10.00. மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் இதற்கு சமூகமளித்தல் வேண்டும்.
9. இதுபற்றிய மேலதிக தகவல்கள் அல்லது நிபந்தனைகள் தேவைப்படின் யாழ்ப்பாணம் மாநகர சபை நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரங்களில் தகவல்களை பெற்றுக் கொள்ளலாம்.

மாநகர முதல்வர்
மாநகரசபை
யாழ்ப்பாணம்.

## பணியாளர்கள் தேவை

நவாலியில் அமைந்துள்ள அரைக்கும் ஆலை ஒன்றிற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப் படுகின்றனர்.

- இயந்திரம் இயக்குபவர் (அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ள முடியும்).
- காசாளர் (பெண்)

தொடர்புகளுக்கு : **076 3010 115**

## கேள்வி அறிவித்தல்

யாழ் ஒளி மின் நிலையம்,
இலங்கை மின்சார சபை, சுன்னாகம்.

**சேவைகளுக்கான கேள்வி கோரல்**

இலங்கை மின்சாரசபை யாழ் ஒளி மின் உற்பத்தி நிலையத்தில் பணிபுரியும் ஊழியர்களின் குடிநீர் தேவை கருதி சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப்பத்திரங்களை அலுவலக நேரத்தில் பி.ப 3.00 மணி வரை பின்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதான பொறியியலாளர்,
யாழ் ஒளி மின்நிலையம்,
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம்.
தொ.பே.இல.021 224 2247/8

Office of the Deputy General Manager,
Ceylon Electricity Board,
Generation Head Quarters,
New Kelani Bridge Road, Kolonnawa.
Telephone No.0112423 897

கேள்விப்பத்திர பெறுமதி. - ரூபா. 1,000.00
கேள்விப்பத்திர பிணை வைப்பு. - ரூபா. 9,000.00
பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்களை

Office of the Deputy General Manager,
Ceylon Electricity Board,
Generation Head Quarters,
New Kelani Bridge Road,
Kolonnawa.
Telephone No. 0112423897

என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 21.01.2026 பி.ப 10.00 மணிக்கு Office of the Deputy General Manager, Ceylon Electricity Board, Generation Head Quarters, New Kelani Bridge Road, Kolonnawa. என்னும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் திறக்கப்படும்.

# 17 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் S.K. தியாகராசா (தியாகு)

(பிரபல புகையிலை வர்த்தகர்)

தோற்றம்
01.01.1943

மறைவு
01.01.2009

அன்பின் திருவுருவே பாசத்தின் உறைவிடமே
எம் வாழ்வுக்கு ஒளியூட்டிய வட்டநிலவே
ஏணியாக நின்று எம்மை ஏற்றி விட்டவரே......
தோணியாக நின்று துறைமுகம் காட்டியவரே.....
வாழ்வுக்கு இலக்கணமாய் வாழ்ந்து காட்டிய - அப்பா
இன்னும் சில காலம் எங்களோடு வாழ மறந்ததேன் அப்பா?
எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்த
எங்கள் அன்புத்தெய்வம் அணைந்து
ஆண்டுகள் பதினேழு உருண்டோட
எங்கள் மனம் அப்பாவை தேடி நிற்கிறது..!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

நிரந்த முகவரி:
தன்னை, களபூமி,
காரைநகர்.

தற்காலிக முகவரி:
இல.58, மானிப்பாய் வீதி,
ஆறுகால் மடம்.
077 183 6625

உங்கள் நினைவுகளுடன்
என்றும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(CS/28772) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸ்...

கொண்டனர். வலி. வடக்கு பிரதேச சபையின் விசேட அமர்வு தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போதே, கடந்த 21ஆம் திகதி தையிட்டி விகாரை முன்பாக நடைபெற்ற போராட்டத்தில் பொலிஸார் நடந்துகொண்ட விதத்தைக் கண்டித்து, தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களைத் தவிர ஏனைய உறுப்பினர்கள் அனைவரும் கறுப்புப் பட்டிகளை அணிந்தவாறு அமர்வில் கலந்துகொண்டனர். (அ-ம-26)

## கொழும்பு...

இதன்போது, பட்ஜெட்டுக்கு ஆதரவாக 57 வாக்குகளும் எதிராக 60 வாக்குகளும் கிடைத்ததால், பட்ஜெட் தோல்வியடைந்தது.

இதையடுத்து, பட்ஜெட் மீதான வாக்கெடுப்பு நேற்று மீளவும் நடத்தப்பட்டது. இதன்போது ஆதரவாக 58 வாக்குகளும், எதிராக 56 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இதன்படி, மேலதிகமாக 2 வாக்குகளால் பட்ஜெட் நிறைவேற்றப்பட்டது. (அ-ம-44)

## காலி...

ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் இருவர், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் இருவர் மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர் ஒருவர் என ஐந்து பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியின் கட்டுப்பாட்டில் உள்ள அந்தச் சபையின் கடந்த அமர்வின்போது பல்வேறு சர்ச்சைகள் ஏற்பட்டிருந்தன. இதன் தொடர்ச்சியாகவே, நேற்றும் குழப்பங்கள் ஏற்பட்டு தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## மயங்கி...

துள்ளார். வீட்டிலிருந்து தேவையின் நிமித்தம் வெளியில் சென்ற அவர், ஆறுகால்மடம் மடத்தடிப் பகுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இறப்புக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில், உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## பழைய...

நீங்களும் பொய்களைக் கூறி இழப்பீடுகளைப் பெறுங்கள் - இவ்வாறு பொதுமக்களிடம் தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா.

காரைநகர் பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டம் காரைநகர் ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் ஸ்ரீபவானந்தராஜா தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், டித்வா புயலால் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் அழிவுகளுக்கான இழப்பீடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது, இலத்திரனியல் உபகரணங்கள் பாதிப்படைந்தால் 50 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்குவதற்குத் திட்டம் உள்ளது. அந்த இழப்பீடு மக்களுக்கு வழங்கப்படுகின்றதா? என்று நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா கேள்வி எழுப்பினார்.

இதன்போது, 'அது தொடர்பான விண்ணப்பப் படிவங்களை இன்னமும் மக்களுக்கு வழங்கவில்லை' என்று பிரதேசசெயலர் பதில் வழங்கினார். இதன் பின்னரே, 'அந்தப் படிவங்களை வழங்கி மக்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குங்கள். தெற்கில் பலர் இந்த கொடுப்பனவுக்கான பதிவுகளை மேற்கொண்டு பணத்தைப் பெறுகின்றனர். நானும் பழைய ஐபாட் ஒன்றினை காண்பித்து, அது மழைத் தண்ணீரால் பழுதடைந்துவிட்டதாகக் கூறி 50 ஆயிரம் ரூபாவை எடுத்தேன். நீங்களும் அவ்வாறு பொய்யாவது கூறி அந்தப் பணத்தை எடுங்கள். அது மழையால் பழுதடைந்தது என நிரூபிக்க வீடியோவோ, புகைப்படங்களோ எதுவும் தேவையில்லை. உடனடியாக அந்தக் கொடுப்பனவுகளை மக்களுக்கு பெற்றுக்கொடுங்கள்' என்று நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா தெரிவித்தார். (அ-ம-20-27)

## மணல்...

ஸாரின் உத்தரவுக்குக் கட்டுப்படாமல் டிப்பர் தொடர்ந்தும் பயணித்துள்ளது. கிளிநொச்சி - பரவிப்பாய்ஞ்சான் வீதியூடாக டிப்பர் சென்றபோது, அதன் மீது பொலிஸாரால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. இதையடுத்தே, வீதியில் மணலைக் கொட்டிவிட்டு டிப்பர் தப்பிச் சென்றுள்ளதாகக் கூறப்படுகின்றது. தப்பிச் சென்றவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-113)

## ஆக்கிரமிக்கப்பட்ட...

தையிட்டி திஸ்ஸ விகாரை மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளின் உரிமையாளர்களுடன், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் நேற்றுக் கலந்துரையாடல் நடத்தினார். யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் காலை 10 மணியளவில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போதே, தையிட்டியில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகளை தையிட்டி திஸ்ஸ விகாராதிபதியின் சம்மதத்துடன் கட்டம் கட்டமாக விடுவிக்க முடியுமென யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார். அத்துடன் விடுவிக்கக் கூடிய காணிகளின் சாத்தியப்பாடுகள் மற்றும் எல்லைகள் தொடர்பில் காணி உரிமையாளர்களுடன் ஆராய்ந்தார்.

இதன்போது கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்கள் திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணியை மட்டுப்படுத்தி அந்தக் காணியை விட்டு அதனைத் தவிர்த்து ஏனைய காணிகளை முதற்கட்டமாக விடுவிக்க இணக்கப்பாட்டைத் தெரிவித்தனர். கட்டம் கட்டமாகக் காணிகளை விடுவிப்பதற்கு யாழ்.மாவட்டச் செயலர் தொடர் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் காணி உரிமையாளர்கள் ஏகமனதாகச் சம்மதம் வெளியிட்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட மேலதிக செயலாளர் (காணி) பா.ஜெயகரன், தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் திருமதி சிவகெங்கா சுதீஸ்னர், ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-ம-66-20-26)

## ஊழலற்ற...

அரசாங்கத்துக்கு எதிராக முன்வைக்கப்படும் விமர்சனங்கள் தொடர்பிலும் அமைச்சர் லால்காந்த ஊடக சந்திப்பை நடத்தியுள்ளார். இதன்போதே, ஊழலற்ற ஆட்சியால் மக்களின் மனங்களை அரசாங்கம் வென்றுள்ளது. இதனால் எதிர்க்கட்சிகள் கலக்கத்தில் உள்ளன என்று கூறியுள்ளார்.

ஆட்சி அதிகாரத்தை இழந்து தவிக்கும் தரப்பினர், அரசாங்கத்தின் வெற்றிப் பயணத்தால் அச்சத்தின் உச்சத்துக்குச் சென்றுள்ளனர். தம்மால் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது என்ற கவலை அவர்களைச் சூழ்ந்துள்ளது. இதனால்தான், அரசாங்கத்துக்கு எதிராகப் பல பொய்யான பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றனர் .எத்தனை பொய்களைப் பரப்பினாலும், சதிகளை மேற்கொண்டாலும் அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு அவர்களால் முடியாது. ஏனெனில், மக்கள் சக்திக்கு முன்னால் வேறு சக்திகளால் தாக்குப்பிடிக்க இயலாது என்று அமைச்சர் லால்காந்த மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-44)

## பொலிஸ் துறை...

ஊழல் மற்றும் மோசடிக் குற்றச்சாட்டில், முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் மகன் கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவரைப் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே, ஸ்ரீலங்காவின் பொலிஸ்துறை அரசியல் மயப்படுத்தப்பட்டு வருகின்றது என்று விமர்சித்துள்ளார்.

தமது தேவைக்கேற்ப சட்டத்தைச் செயற்படுத்துவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முயற்சித்து வருகின்றது. பக்கச்சார்பான நடவடிக்கைகள் காரணமாக, பொலிஸ் திணைக்களம் மக்கள் மத்தியில் நன்மதிப்பை இழந்து வருகின்றது. எனவே, அரசியற் பழிவாங்கல் செயற்பாடுகளைக் கைவிடுமாறு பொலிஸாரை வலியுறுத்துகின்றோம் என்றும் நாமல் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தலைமறைவாகியுள்ளார் என்றும், அவரைக் கைது செய்வதற்காக விசேட பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் கூறுகின்றனர். எமது தரப்பினர் எவரும் ஓடி ஒளியமாட்டார்கள். உரியவாறு அறிவித்தால் நாங்களே பொலிஸில் முன்னிலையாவோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-ம-44)

## அக்கரைப்...

தொண்டைமானாறு நீரேரிக்கு மேற்குப் பக்கமாக உள்ள சதுப்பு நிலத்தில் வெள்ளநீர் தேங்கி குட்டைகளாகக் காணப்படுகின்றது. அந்தப் பகுதியிலேயே முதலைகளின் நடமாட்டம் உள்ளதாகக் கூறப்படுகின்றது.

வடமராட்சி - வலிகாமம் இடையிலான இணைப்புப் பகுதியாக உள்ள குறித்த நிலப்பரப்பில் இரவு - பகலாக நூற்றுக்கணக்கான பொதுமக்கள் பயணிக்கின்றனர். அச்சுவேலி, வலிகாமம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து செல்வச்சந்நிதி ஆலயத்துக்கு வந்து செல்லும் ஏராளமான பக்தர்களும் குறித்த பகுதியூடாகவே பயணித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-100)

மணல் விற்பனை/ பெமிட் போட்டு தரப்படும்.

கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற பூச்சு மணல் விற்பனைக்கு உண்டு. மற்றும் கனரக வாகனங்களுக்கு யாழ் மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டு தரப்படும். ரூபா - 35000/-

தொடர்புகளுக்கு: 076 324 9977

(CS66312) J-1

யாழ் நகரில்

iQ WORLD

நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (TCT SUPER CENTRE முன்பாக)

ஆசிரியர் : என்.எஸ்.தீபன்

யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை

தரம் 3,4,5 மாணவர்களுக்கான

I.Q Classes | Paper Classes

புதிய பிரிவுகள் ஆரம்பம் 02.01.2026 வெள்ளி

| தரம் 03 | தரம் 4 | தரம் 5 |
|---|---|---|
| மாலை 3.30 - 5.00 | மாலை 5.15 - 6.45 | மாலை 7.00 - 8.30 |

தொடர்புகளுக்கு: 077 666 0749

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.01. 2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org